விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 26 வெள்ளிக்கிழமை (12.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தமிழருக்கு உதவும் நிலைப்பாட்டில் இந்திய அரசாங்கம் பின்வாங்காது!


### கூட்டமைப்பிடம் பிரதமர் உறுதியளிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் சுய மரியாதையுடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்கு உதவ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து இந்தியா பின் வாங்காது என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அவரை சந்தித்த போது இவ்வாறு உறுதிமொழி வழங்கப் பட்டது. (19ஆம் பக்கம் பார்க்க)



## டிரக்ராில் நசியுண்டு குழந்தை பலி



(புதுக்குடியிருப்பு)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று திடீரென உருண்டு சென்று சிறுமி மீது ஏறியதில் அச் சிறுமி உடல் நசியுண்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இது குறித்து தெரியவருவதாவது,

அண்மையில் மீளக் குடியமர்ந்த பிரஸ்தாப குழந்தையின் குடும்பத்தினர் தகரத்திலான வீட்டினை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

நேற்றுக் காலை குழந்தையுடன் அவரின் சகோதரர்களான மேலும் இரண்டு சிறுவர்கள் அவ் வீட்டினுள் (20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். இன்று முற்பகல் 11மணியளவில் யாழ்ப்பாணம் வருகை தரும் அமைச்சர் பீரிஸ் யாழ். சிவில் பாதுகாப்பு தலைமையகத்தில் இடம்பெறும் நிகழ்வில் பங்கு கொள்கின்றார்.

இதன்பின்பு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இடம்பெறும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நிகழ்விற்கும் செல்லவுள்ளார்.

இன்று யாழ்.சிவில் பாதுகாப்பு தலைமையகத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை இராணுவத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளையாழ்.வரும்அவர்யாழ்.அரசஅதிபர்மற்றும்யாழ்ப்பாணவர்த்தகர்களுடன் சந்தித்து பேசுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஏ-4,6)

## இறுதிப் போரில் புலிகள் சரணடைய விரும்பினர்!

### சொல்ஹெய்ம் சொன்னதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இறுதிக் கட்ட போரின் போது தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் சரணடைவதற்கு முயற்சி செய்ததாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது. உலக நாடுகளில் இயங்கி வந்த அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும் அந் நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கும் இடையிலான தொடர்பாடல்களை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த அடிப்படையில் நோர்வேக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், இலங்கை விவகாரம் தொடர்பில் பரிமாறிக் கொண்ட தகவல்களும் விக்கிலீக்ஸில் வெளியிடப்பட்டுள்ளது.

இறுதிக் (20ஆம் பக்கம் பார்க்க)

## விரிவுரையாளர்களின் போராட்டம் 99 நாட்களின் பின் நிறைவுக்கு வந்தது

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது 99 நாள் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளனர். சங்கத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜீத் இதனைத் தெரிவித்தார்.

சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி இன்று முதல் விரிவுரையாளர்கள் பணிக்குத் திரும்புவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், அடுத்தவாரம் முதல் உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளிலும் விரிவுரையாளர்கள் பங்கு கொள்வார் என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் தற்போது தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த உறுதி மொழிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லையென்றால் மீண்டும் பாரிய போராட்டம் ஒன்றுக்கு செல்வதை தவிர்க்க முடியாது என்றும் டெரன்ஸ் மதுஜீத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக பல்கலைக் கழக பேராசிரியர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் பணிக்குத் திரும்புவதில்லையென பல்கலைக்கழக பேராசிரியர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி.செல்ல முற்பட்ட 112 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 112 பேரை சிலாபம் கடற்பரப்பில் வைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் முகத்துவாரம் துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என (20ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோய்த் தாக்கம் ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சை பெறுங்கள்

### சுகாதார பிராந்திய பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பிந்திய நிலையில் வைத்திய சாலைகளுக்கு செல்லாது உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

தற்போது யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் பரம்பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந் நிலையில் பல நோயாளர்கள் மிகப்பிந்திய நிலையில் சிகிச்சைக்காக வைத்திய சாலைக்கு வருவதையும், பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு [illegible]

## வெளிநாட்டிலுள்ளவர்கள் வாக்காளராக பதிய முடியும்

### உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலுள்ளவர்கள் தமது உறவினர்கள் ஊடாக வாக்காளராக தம்மை பதிவு செய்து கொள்ள முடியும் என யாழ்.தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மற்றும் ஏனைய நாடுகளில் உள்ள இலங்கையைச் சேர்ந்த வாக்காளர்கள் தம்மை பதிவு செய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு ஏதாவது ஒரு ஆவணத்தை சமர்ப்பித்து தம்மை வாக்காளராக (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ் சிங்கள மகா வித்தியாலய காணியில் புதிய படைமுகாம் அமைக்க ஏற்பாடு!

## அடிக்கல் நாட்டும் விழா 17ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய காணியில் படைமுகாம் ஒன்றினை அமைப்ப தற்கான நட்வடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் படை முகாம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர் வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் இலங்கை இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய பிரதம விருந்தினராக கலந்த கொள்ளவுள்ளார் என தெரியவருகிறது.



இருப்பினும் இராணுவத் தளபதி யாழ்ப் பாணம் வருகை தரவுள்ளதை யாழ். சிவில் இராணுவத் தொடர்பு பணிமனை மறுத்துள்ளது.

யாழ்ப்பாணம் ஒ.எல்.ஆர் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகாமையில் (வைத்திய சாலை வீதியில்) முன்பு சிங்கள பாடசாலை இயங்கி வந்தது. ஆனால் தற்போது முற்றாக அது செயலிழந்துள்ளது.

இந்நிலையில் பாடசாலைக் காணிக்குள் படைமுகாம் ஒன்றினை அமைக்க 51ஆவது படைப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறித்த காணி ஆரம்பத்தில் தனியார் ஒருவருக்கு சொந்தமாக இருந்ததாகவும் 1960ஆம் ஆண்டு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சிங்கள பாடசாலை ஒன்று அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது சுமார் 15 பரப்புடைய காணி எனவும் என்ன நோக்கத்திற்காக காணி சுவீகரிக்கப்பட்டதோ அதை மீறி குறித்த காணிக்குள் எந்தவித நடவடிக்கைகளும்மேற்கொள்ளமுடியாதுஎனவும்,

அவ்வாறு மேற்கொண்டால் அது சட்ட விரோதமானது எனவும் காணி விவகாரங்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் காலை குறித்த காணிக்குள் இலங்கை இராணுவத்தின் 63ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த 51ஆவது படைப் பிரிவு அதிகாரியினால் குறித்த காணியில் படைமுகாம்அமைக்கப்படவுள்ளதாகக்கூறப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் கொழும்புத் துறைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படைமுகாமை அங்கிருந்து அகற்றி அக்காணியை பொதுமக்களிடம் கையளிப்பதற்காகவே மேற்படி சிங்கள மகாவித்தியாலயக் காணியில் படைமுகாம் அமைக்கப்படவுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வர்ணகுலசூரிய தகவல் வெளியிட்டுள்ளார்.

மேலும்யாழ் மாவட்ட 51 ஆவது படைப் பிரிவுக்கு பொறுப்பான இராணுவஅதிகாரி குமுது வடுகொட உள்ளிட்ட அதிகாரிகள் யாழ் மாநகர சபை முதல்வரிடம் சிங்களப் பாடசாலைக் காணியில் படைமுகாம் அமைப்பதன் ஊடாக அரியாலை, கொழும்புத் துறை, குருநகர் பகுதியில் இராணுவத்தின் கட்டுப் பாட்டிற்குள் உள்ள தனியாருக்கு சொந்தமான வீடுகள் காணிகளை கையளிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனை யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் உறுதிப்படுத்தினார். இருந்தும் பாடசாலைக் காணிக்குள் படைமுகாம் அமைக்கப்படுவது தொடர்பில் கல்விய லாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு எதிர்காலத்தில்சிங்களப் பாடசாலை ஒன்று அமைப்பதற்கான தேவை ஏற்பட்டால் காணிக்கு கல்வி அமைச்சு எங்கே போகப் போகிறது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-6)


### வாழ்த்தி வரவேற்கின்றோம்



யா/கொக்குவில்
இந்துக் கல்லூரியின்
வரலாற்றுப்
பெருமைமிக்க
அதிபர்களின்
வரிசையில் புதிதாக
இணைந்திருக்கும்
அர்ப்பணிப்பும்
ஆளுமையும் கொண்ட
அதிபர்

**திரு.வே. ஞானகாந்தன்**

அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(C-1280)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS)
பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. கந்தப்பு பரமேஸ்வரன்**

(ஆசிரியர் கிளி/கண்ணகை அம்மன் வித்தியாலயம்)



சிறந்த ஆசிரியருக்கான
2012 "பிரதீபா பிரபா"
விருதினை அதிமேதகு
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ
அவர்களிடமிருந்து 09.10.2012
இல் பெற்றுக் கொண்ட
திரு. கந்தப்பு பரமேஸ்வரன்
அவர்களை பாராட்டி
வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்

(728)

"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

### ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும்

### 'ENGLISH IN ACTION'

for

* Professionals * Journalists * Teachers
* Nurses * Government Officers * Graduates
* Medical/ Law/ I.T./ Accountancy students
* Undergraduates/ Teacher - trainees/ Nursing Students
* Pre-school Teachers * Ladies * Businessmen
* the A'Level Qualified * Those going abroad

(725)

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

"கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க."

விபரங்கள் + பெயர் பதிவு : 773 212 711 மூலம்

குருகுல மரபு : (i) கல்வி இலவசம்

(ii) விரும்புவோர், குருதட்சணை கொடுக்கலாம்.

### செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30, 2.30, 6.30, 9.30

### பணியாளர்கள் தேவை

வடிவமைப்பாளர்கள்
ஆண்/பெண்
(Graphic Designer) தேவை.

தொடர்புகளுக்கு:-
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1358

(C-1273)

### போட்டிப்பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன

தொகுப்பு : த. தவசேகர்

★ கிராம சேவையாளர் (G.S) விலை 300/-
★ புதிய பொதுஅறிவு பொதுஉளச்சார்பு விலை 400/
★ கூட்டுறவு பரிசோதகர் விலை 300/-

பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை கவிதா (வவுனியா) புத்தக நிலையங்களில் பெறலாம்.

(730)

### யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

**தரம் 6 அனுமதி - 2013**

2013 ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தரம் 6 இல் தமிழ்/ஆங்கில மொழி மூலங்களில் அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2012**

அதிபர்

(C-1282)

மின்சாரம் தடைப்படுவதால் ஏற்படும் நட்டத்தை இல்லாதொழிக்க...

4050 க்கும் மேற்பட்ட மின்பிறப்பாக்கிகள் இலங்கையில் பயன்பாட்டிலுள்ளன

MACK POWER

### கிர்லோஸ்கார்

மின்சார பிறப்பாக்கி



* குறைந்த பட்ச செலவு
* இலகுவான பராமரித்தல்
* விருப்பத்திற்கு ஏற்ப AMF/AD வசதிகள்

BMICH இல் நடைபெறும் டெக்னோ 2012
விற்பனைக்கூட இலக்கம் 138, 156 மற்றும் 157 இல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
ஒக்டோபர் 12 இலிருந்து 14 வரை

ரூ.595,000 இலிருந்து

071-4269470
077-7563453

* சிறந்த முகாமைத்துவ தொகுதிக்காக ISO 9001 சான்றிதழ்
* சுற்றாடல் முகாமைத்துவ தொகுதிக்காக ISO 14001 சான்றிதழ்
* US Tire 1/11 வெளியேற்றல் நியமத்தின் பிரகாரம்

(731)

மெக்ஸ்வுட்ஸ் எனர்ஜி பீஎல்சீ
10. ஞானார்த்த பிரதீப மாவத்தை. கொழும்பு - 08.
தொலைபேசி : 011-2691186 தொலைநகல் : 011-2699454
மின்னஞ்சல் : me@mackwoods.com
இணையம் : www.mackwoodsenergy.com

KIRLOSKAR GREEN POWER IDEAS

### அந்தியேட்டி சபிண்டீகரண
### ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 26 | | 13 |
| 08 | | 09 |
| 1948 | | 2012 |



அமரர்
**கந்தையா கனகம்மா**

கடந்த 13.09.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் **அமரர் கந்தையா கனகம்மா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 13.10.2012 சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00மணியளவில் இடம் பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் தயவு செய்து இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
ஆண்டாவளவு, கரணவாய் வடமேற்கு, கொற்றாவத்தை.

(C-1279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## புன்னகை

எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்கவேண்டும். அது தான் நல்லது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

''சொல்லுபவர்கள் எல்லோரும் சுலபமாகக் கூறிவிட்டுப் போய்விடுவார்கள். என்னுடைய கஷ்டம் எனக்கல்லவா தெரியும்'' என்று நாம் நினைப்பதுண்டு.

கஷ்டம் இருக்கிறது என்பதனால் முகத்தை "உம்" என்று வைத்துக்கொள்வதில் என்ன பிரயோசனம்?

சிரித்த முகத்துடன் எப்போதும் இருக்க வேண்டும் என்றால்..... தெருவிலே போகும் போதும் வரும் போதும் சிரிக்க வேண்டும் என்று அர்த்தம் அல்ல. அப்படி போனால் பார்க்கிறவர்கள் சந்தேகப்படுவார்கள் .

முகம் மலர்ச்சியாக இருக்க வேண்டும். உதட்டிலே புன்னகை தவழ வேண்டும். இப்படியாக இருப்பதற்கு நம்மையே நாம் பழக்கப் படுத்திக் கொள்ளவேண்டும்.

சில கடைக்காரர்களைப் பார்த்திருப்பீர்கள். பொருட்கள் வாங்குவதற்கு வருபவர்கள் சோப்பை கேட்பார்கள். நீங்கள் கேட்கும் சோப் கடையிலே இருக்காது. கடைக்காரனும் இல்லை என்று சொல்ல மாட்டார்.

வேறு ஒரு சோப்பை எடுத்துக்கொடுத்து ''இது கூட நீங்கள் கேட்கும் அந்த சோப் மாதிரியே தான் சேர்.....ஒரு தடவை பாவித்துப் பாருங்கள் '' என்று புன்னகையோடு சொல்வார்.

இதேமாதிரி நடிகர்கள், தரகர்கள் இவர்கள் எல்லோரையும் நீங்கள் சந்தித்திருக்கலாம். சிரித்த முகத்துடன் தான் பேசுவார்கள்.

உள் மனதிலே ஏற்படும் மலர்ச்சி, மகிழ்ச்சி தான் புன்னகையாக வந்து உதட்டிலே உதிக்கிறது.

இப்போது நாம் நீச்சல் தடாகத்திலே நீந்துவதற்குப் பழகுகிறோம். சைக்கிள் ஓடுவதற்கு கற்றுக் கொள்கிறோம். அதே மாதிரி புன்னகையோடு இருப்பதற்கு பழகிக் கொள்ளவேண்டும்.

பயிற்சிகளை மேற்கொள்வதற்கு பயிற்சியாளர் தேவை. ஆனால் புன்னகை பயிற்சியை வாத்தியார் வைத்துக் கொள் ளலாம். கற்றுக் கொடுக்கமுடியாது. இது சொந்தமாக இயற்கையாக கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பழக்கம்.

புன்னகை தவழும் முகத்தோடு இருக்கிறவர்களில் சில பேரைத் தேர்ந்தெடுத்து ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள் நிபுணர்கள். அதில் இருந்து என்ன தெரியவந்தது என்றால்.....

அவர்கள் எல்லோரும் எந்த சூழ்நிலையிலேயும் அமைதியாக இருக்கப் பழகிக் கொள்கிறார்கள். என்னதான் கஷ்டம் வந்தாலும் அதனைத் தாங்கிக் கொள்ளும் சக்தி, மனப்பக்குவம் அவர்களிடம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியது. துன்ப வேளையிலே படபடத்துக்கொண்டு இருக்கமாட்டார்கள்.

முக்கியமாக பெண்களுக்கு இது மிகவும் அவசியமானதொன்றாகும். பெண்கள் காதிலே, மூக்கிலே, கழுத்திலே நகை அணிந்திருப்பார்கள். பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கும். ஆனால் உதட்டிலே இருக்க வேண்டிய புன்னகை என்கிற அழகு நகை இல்லாவிட்டால் ஏனைய அனைத்து அழகிற்கும் மதிப்பில்லாமல் போய்விடும். அது தான் புன்னகையோட மதிப்பு.

இந்த நகை கடையிலே விற்றால் வாங்கிக் கொடுத்து விடலாம். இல்லையே... என்ன செய்வது? வெளி அலங்காரத்திலே இருக்கிற ஆர்வம் உள் அலங்காரத்திலேயும் இருக்க வேண்டும். புன்னகையிலே தெய்வீகப் புன்னகை மிகவும் உயர்ந்தது. அது எல்லோரினதும் முகத்திலே சுலபமாக வந்துவிடாது. காந்திஜி முகத்திலே அது தவிழ்ந்தது. ராமகிருஷ்ண முகத்திலே அது மிளிர்ந்தது.

சுமை எவ்வளவு அதிகமாக இருந்தாலும்கூட நகைச்சுவை உணர்வு இருக்கிறவர்களுக்கு அது கனமாக தெரியாது. இலேசாக இருக்கிறது.

காந்தியிஜின் மனதிலே எவ்வளவு சுமைகள்... பிரச்சினைகள் இருந்தாலும் அவரது முகத்திலேயே எரிச்சல் தெரிந்ததா? அதற்குக் காரணம் அவரிடமிருந்த நகைச்சுவை உணர்வு. " எனக்கு இந்த நகைச்சுவை உணர்வு மட்டும் இல்லையென்றால் நான் எப்போதோ தற்கொலை செய்து இருப்பேன்" என்றார்.

ஒருநாள் காந்திஜி ஆச்சிரமத்திற்கு ஒருவர் வந்தார். வந்தவர் சரியான அறுவைப் பேர் வழி.

அன்றைய தினம் அவர் பாலைப் பற்றி பிரசங்கம் செய்தார். பால் என்றால் என்ன? பசும் பால் எப்படி? எருமைப் பால் எப்படி? இவை இரண்டிற்கும் இடையேயான வித்தியாசம் பற்றி விளக்கமளித்தார். ஆனால் இருந்தவர்களுக்கு இதைக் கேட்க முடியவில்லை. பல்லைக் கெட்டியாகக் கடித்துக் கொண்டு இருந்தார்கள். பிரசங்கியாரோ தனது பிரசங்கத்தை முடிபுக்கு கொண்டு வருவதாகத் தெரியவில்லை.

எருமைப்பால் குடித்தால் எமது குணம் எருமை மாதிரியே ஆகிவிடும். மந்தபுத்தி வந்து விடும். பசும் பால் குடித்தால் நாமும் பசு மாதிரி சாதுவாகி விடுவோம்– இப்படியாக அடுக்கிக்கொண்டே போனார்.

காந்திஜி சரியான நேரத்திலே குறுக்கிட்டு, பிரசங்கியாரிடம் ''இதோ பாருங்கள்....நான் ஆட்டுப்பால் குடித்துக்கொண்டு வருகின்றேன்.... அதனால் உங்களது பிரசங்கம் நீடிக்குமானால் உங்களை முட்டினாலும் முட்டி விடுவேன்'' என்றார். பிரசங்கியார் உட்பட அனைவரும் சிரித்தனர்.

இந்த நகைச்சுவை உணர்வு தான் அவர் முகத்திலே நிலையாக இருக்கிற புன்னகைக்குக் காரணமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இறைவரித் திணைக்களத்தின் வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் யாழ். பிராந்திய அலுவலகமும் இத்திணைக்களத்தின் தலைமையக வரி செலுத்துவோர் சேவைகள் பிரிவும் இணைந்து யாழ். நகரில் இம்மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு ஒன்றை பிரமாண்டமாக நடத்துவதற்கு ஏற்பாடுகளை செய்து வருவதாக உள் நாட்டு இறைவரித்திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணை யாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

இத்திணைக்களத்தில் யாழ். பிராந்திய திணைக்களத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள வர்த்தகர்கள், வரி செலுத்துவோர், கணக்காளர், இதுவரை வரி செலுத்தாது தம்மைப் பதிவு செய்ய விரும்புபவர்கள், மாணவர்கள் இவை தவிர வரி பற்றி அறிய விரும்பும் பொதுமக்கள் அனைவரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றமுடியும். மேலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி மல்லிகா சமரசேகர பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். யாழ். பிராந்திய நிர்வாகத்துக்குட்பட்ட பிராந்தியத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த வரி செலுத்துவோருக்கான சிறப்புரிமைச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

மேலும்உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் பிரதான வரிகளான வருமான வரி, பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் போன்றவற்றிற்கு தெளிவான விளக்கங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, இக் கருத்தரங்கில் பங்குகொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுக் கொண்டார். (அ)

# மிதிவெடி வெடித்ததில் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை மிதிவெடி வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமுற்றதாக வடக்கு, கிழக்கு மாகாண மிதிவெடி செயற்பாட்டுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் வ. முருகதாஸ் தெரிவித்தார். வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போதே மிதிவெடியில் மோட்டார் சைக்கிள் சிக்குண்டது. இந்த மிதிவெடி வேறு இடத்திலிருந்து குறித்த பகுதிக்கு கொண்டு வந்து போடப்பட்டிருக் கலாம் எனவும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (அ–6)

# நூல்வெளியீட்டு விழா

வேலணையூர் பண்டிதை வேதநாயகியின் ஆக்கங்கள் ஆராய்ச்சிகளின் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையினை ஓய்வுநிலை அதிபர்களான ஆ.சபாரத்தினம், மு.திருஞானசம்பந்தப் பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நூலின் வெளியீட்டுரையை யா/வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் மு.மகே ந்திரன் ஆற்ற தொடர்ந்து நூலிற்கான ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் ஆற்றவுள்ளார். (அ–9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 55 | 100 | 30-40 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 65 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 45 | 60 |
| தக்காளி | 50 | 30 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 80 | 60 | 70 |
| கரட் | 100 | 80 | 100 | 120 |
| பூசணி | 60 | 30 | 35 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 140 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 50 | 70 |
| பயற்றங்காய் | 40 | 40 | 30 | 40 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 60 | 40-80 | 30-40 | 40 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | -- | -- |
| கீரை – 1.பிடி | 15 | 20 | . 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 280 | 250-270 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40. | 40 | 20-35 | 27-30 |

# இராசி பலன்

12.10.2012
(புரட்டாதி26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
துவாதசி முன்னிரவு 10.53 மணிவரை
மகம் பிற்பகல் 12.07 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
அருநந்தி சிவாசாரியார் குருபூசை

**மேடம்** தொட்ட காரியத்தில் வெற்றி பெறும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், கந்தன் வழிபாடு காரிய வெற்றியைத் தரும், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** பாகப் பிரிவினைகள் சகோதர வழி ஒத்துழைப்பால் சுமுகமாக முடியும், தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், பொருளாதார நிலை திருப்தி தரும்.

**சிங்கம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் உருவாகலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன்மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், தொழிலில் வருமானம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதாக வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், செய்தொழிலில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறலாம்.

**மகரம்** உடல்ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புகள் தேடி வரும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், கடன் பிரச்சினையை சாதுரியமாகப் பேசி சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு தொற்றுக்கு இலக்காகி 315 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழில் இவ்வருடத்தில் மட்டும் 315 பேர் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி உள்ளதாகவும் இரண்டு பேர் உயிரிழந்துள்ள தாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை யின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.


அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக் கையில்,

இவ்வருடம் நேற்றைய தினத்திற்குட்பட்ட காலப்பகுதி வரையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்த்தொற் றுக்கு இலக்கான 315 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கடந்த ஜூன் மாதத்தில் ஒரு இறப்பும் இம்மாதத்தில் ஒரு இறப்புமாக மொத்தம் இரு இறப்புக்கள் பதிவாகியுள்ளன. இம் மாதத்தில் 48 பேர் டெங்கு தொற்றுக்கு இலக்காகியுள் ளனர். அதில் 22 பேர் சிறுவர்களாகவுள்ளனர்.

அதில் நல்லூர் பிராந்திய சுகாதார பணி மனைக்குட்பட்ட பிரதேசங்களில் 33 பேரும் யாழ்.பிராந்திய சுகாதார பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் 18 பேரும் உள்ளனர்.

இவ் டெங்கு நோயாளர்கள் நல்லூர் பிர தேசசபைக்கும் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களிலேயே அதிகமாக காணப்படுவ தோடு மேலும் அதிகரித்தும் வருகின்றது என்று குறிப்பிட்டார். (அ-4)



நன்றி: ஜலன்ட்

# ஆணையாளர் இடமாற்றத்தை வன்மையாக கண்டிக்கிறோம்

## யாழ்.மாநகர எதிர்க் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இடமாற்றம் செய்யப்பட்ட ஆணையா ளரை மீண்டும் நியமிக்க மாநகரசபை ஆளும் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாநகரசபை ஆணையாளராக நியமனம் பெற்று வந்த பின்பு எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி திடீரென அதிரடியாக வடமாகாண உள்ளூ ராட்சி உறுப்பினர்கள் அமைச்சுக்கு இடமாற்ற ப்பட்ட நிகழ்வானது மாநகரசபை உறுப்பின ர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், மக் கள் ஆகியோரை அதிர்ச்சிக்கும் ஆச்சரிய த்திற்கும் உள்ளாக்கியுள்ளது. அதுமட்டுல்ல அண்மைக்காலமாக வடமாகாணத்தில் திணைக்கள அதிகாரிகளை இப்படி திடீரென இடமாற்றும் நிகழ்வுகளால் துறைசார் திணை க்கள அதிகாரிகள் மத்தியில் இப்போது குழப்ப நிலையும் அச்சநிலைமையும் ஏற்பட்டு வரு கின்றது.

இவற்றை எம்மால் ஏற்றுக்கொள்ள முடி யாது. இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். எஸ்.பிரண வநாதன் ஆணையாளராக பொறுப்பேற்ற பின்பு மாநகர உள்ளகத் துறைசார் திணைக் களங்களுக்கு அதிகாரங்களை உரிய முறை யில் பகிர்ந்தளித்து அவர்களின் சுதந்திரமான நீதியான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து வந்தவர்.

வரி, வாடகை அறவீட்டுச் செயற்பாடு களை சீர்செய்து ஏலவிற்பனை முறைகளை ஒழுங்குப்படுத்தி மாநகரசபைக்கு அதிக வரு மானம் வரக்கூடிய வியூகங்களை வகுத்து உத்வேகத்துடன் செயற்பட்டவர்.

முற்றாக அரசியல் சார்ந்த செயற்பாடு களையும் தவிர்த்து வந்தவர். மாநகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தங்கள் பணிகளை கடமையுணர்வுடன் நேர்மையாக செய்ய வேண்டும் என விரும்பி அவர்களை யும் நல்லமுறையில் வழிநடத்தியவர். அத் தோடு மாநகர அபிவிருத்தி, சுகாதார மேம்பாடு போன்றவற்றில் ஓர் புதுப்புரட்சியை ஏற் படுத்தி எல்லோராலும் விரும்பப்படும் ஓர் நேர்மையான அதிகாரியாக மதிக்கப்பட்டவர்.

இவரது சேவை, திறமை, தகுதி அடிப்படை யில் பெற்று தந்த புள்ளிகளின் அடிப்படை யில் இவர் ஜப்பான் நாட்டுக்கு சென்று புல மைப்பரிசிலில் தோற்றுவித்து பட்டம் பெறும் வாய்ப்பும் கிட்டியிருந்தது. இத்தகைய வாய்ப் புக்கள் ஒரு பெரும்பான்மையினத்தை சேர் ந்த அதிகாரிக்கும்கிட்டியிருந்தது.

இவருக்கான இந்த திடீர் இடமாற்றத்தால் அந்த வாய்ப்பு ஓர் தமிழனுக்கு இல்லாமல் போய்விட்டது. அது இப்போது ஒரு பெரும் பான்மையினத்தை சேர்ந்த அதிகாரிக்கு கைமாறும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, நான் ஒரு மாநகரசபை உறுப் பினர் என்ற ரீதியில் மாநகர ஆளும் தரப்பிடம் பகிரங்கமாக கோருவது என்னவென்றால் ஆணையாளரின் சேவையின் தேவை கருதி யும் மாநகர ஆணையாளர் என்ற பதவியூடாக ஜப்பான் நாட்டில் கிடைக்கப்பெற்ற திண்ம கழிவு முகாமைத்துவ கற்கைநெறி மூலம் புலமைப்பரிசிலில் தோற்றுவித்து பட்டம் பெற்று அதனூடாக இன்னும் மாநகரசபைக்கு வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஆணையாளர் விரிவுபடுத்தி முன்னெடுக்க வாய்ப்பளிக்கும் முகமாக இவருக்கான பயிற்சி நெறியை மேற்கொள்ள இவரை உடனடியாக மீளவும் ஆணையாளராக நியமிப்பதற்கு ஆளும்கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு எதிர்க் கட்சியினரான நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம். என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ-6)




# வேதனமாக வழங்கப்படும் உணவுப் பொருட்களில் மாற்றம்


ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவை வழங்கி வருகின்றது.

இம் மதிய உணவை தயாரிக்கும் தொண் டர்களுக்கான வேதனமாக வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு கடந்த முத லாம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ள தாக இவ் அமைப்பின் செய்திக் குறிப்பொன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ் அமைப்பினால் உணவு தயாரிக்கும் தொண்டர்களுக்கு வழ ங்கப்பட்ட உணவுப் பொருட்களுடன் பாடசா லையில் கல்விபயிலும் பிள்ளைகளின் பெற் றோரிடம் இருந்து பங்களிப்பு பெற்று வழங்கு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் அது வெற்றி அளிக்காமையினால் உணவு தயாரிக்கும் தொண்டர்கள் பல்வேறு இடர் பாடுகளை சந்தித்து வந்தமையை சுட்டிக்காட் டியமையை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதன்படி கடந்த முதலாம் திகதி தொடக்கம் உணவு தயாரிக்கும் தொண்டர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 2 கிலோ அரிசி, 320 கிராம் பருப்பு, 120 கிராம் எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை அதிபர்கள் மேற்படி பொரு ட்களை வழங்குவதுடன் உணவுத் தொண்டர் களின் வரவுப்பதிவேடு, கொடுப்பனவு பதிவேடு, மாணவருக்கு உரிய விநியோகப் பதிவு என் பன முறையாகப் பேணப்பட்டு மாவட்ட செய லகம் மற்றும் வலயக்கல்வி திணைக்கள அணியினர், யுனிசெப் நிறுவன பிரதிநிதிகள் பார்வையிடுவதற்கு வரும் போது சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இத்திட்டம் சிறந்த முறை யில் நடைபெறுவதற்கு அனைத்து தரப்பி னரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கி உதவ வேண்டுமென அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)


யோகிஸ் அழகுக்கலை பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று கேக் ஐசிங் அலங்கார கண்காட்சி இடம்பெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராஜன் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யா/ஞானாசிரியார் கல்லூரி தரம் 1C பாடசாலையினது அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-Iஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும் மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன் கேட்டுள்ளார். (அ)

## ஓராண்டு நிறைவு விழாவும் 'பரதகீதாஞ்சலி' நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டக் காரியாலயத்தால் நடத்தப்படும் இசை நடனக் கல்லூரியின் ஓராண்டு நிறைவு விழாவும் பரதகீதாஞ்சலி சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும்இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் இணைப்பாளர் திருமதி மகாலட்சுமி ஜெயராம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன், கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் ரி.ஈஸ்வரராஜா, யாழ். இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பரதகீதாஞ்சலி நூலின் ஆய்வுரையினை யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் திருமதி குகனேஸ்வரன் விஜயரகுநாதன் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## மகா சனீஸ்வர யாகம்

(யாழ்ப்பாணம்)

முழங்காவில் வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் மகா சனீஸ்வர யாகம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அடியார்கள் தமது தோசங்களை நிவர்த்தி செய்து கொள்ள முடியுமென ஆலய பரிபாலகர் அறிவித்துள்ளார். (அ-9)

## தொ.தொ. கோபுர வளாகத்தில் தீ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சட்ட நாதர் கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுர வளாகத்தினுள் உள்ள மின் இணைப்பு கட்டடத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் திடீரென தீ பற்றி எரிந்தது.

தீ விபத்து தொடர்பாக யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் அனர்த்தங்கள் ஏதும் ஏற்பட முன்பு தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். (அ-6)

YARL Properties

(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

யாழ். குடாநாட்டின் எந்தப் பகுதியிலும் காணிகளை விற்கவோ அல்லது வாங்கவோ எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

## பொதுக்கூட்டம்

கிளி/பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-9)

## விண்ணப்பம் கோரல்

கிளி/ முருகானந்தா கல்லூரி 2013 ஆம் ஆண்டு தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில மொழி, தமிழ்மொழிக்கான அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ் விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் பிரதி அதிபர் கேட்டுள்ளார். (அ)

# தாக்குதலுக்குள்ளான மேஜருக்கு தண்டனை

## இராணுவத் தளபதி பரிந்துரை

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்து அண்மையில் தாக்குதலுக்கு இலக்கான இராணுவ மேஜருக்கு தண்டனை விதிக்குமாறு இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கை அண்மையில் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அறிக்கையை பரிசீலனை செய்த இராணுவத் தளபதி தண்டனை விதிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவு மேஜரான சந்தன பிரதீப் உத்தியோகபூர்வ கைத்துப்பாக்கியுடன் இராணுவச் சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளார் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எவ்வாறான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பதனை புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியே தீர்மானிக்க வேண்டும். அதற்கான முழு அதிகாரத்தையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு மேஜர் பணி நீக்கம் செய்யப்படமாட்டார் என மற்றுமொரு சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பணிநீக்கம் செய்யாது வேறு தண்டனை ஒன்றை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு

முச்சக்கரவண்டி பதிவு தொடர்பானது

புதுக்குடியிருப்பு முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம்
உரிமம் பற்றிய அறிவித்தல்

மேற்படி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இயங்கிவரும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தால் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட கிராமங்கள் தவிர்ந்த தற்போது மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியில் உள்ள மு/வண்டிகள் 11.10.2012 தொடக்கம் 18.10.20102 ஆம் திகதிக்கு முன்னர் உங்கள்பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அதன் பின்பு எந்தப்பதிவும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம்.மு/வ.உரிமையாளர் சங்கம்,
புதுக்குடியிருப்பு. (சி-1277)

ஒறிபிளேம் யாழ். கிளை நிறுவனத்தின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு
யாழ். பொது மக்களுக்கு ரூபா 70,000/= பணத் தொகை பரிசு!!

போட்டி: ஒறிபிளேம் வெற்றிடத்தில் சுயாதீன சிரேஷ்ட முகாமையாளர் ஆகுதல்
போட்டிக்காலம் : ஒக்டோபர்- டிசெம்பர் 2012
போட்டியில் பங்கு பற்றும் தகைமை: ஆண், பெண் எவரும். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும்.
பரிசுத் தொகை: ரூபா 70,000 /= (ரூபா 180 000 வரை வெல்ல வாய்ப்பு உண்டு)

தொடர்புகளுக்கு:- 077 0784428

இப்போட்டியில் எவ்வாறு வெற்றி பெறலாம் என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு இலவச கருத்தரங்கு கீழ்வரும் திகதியில் நடை பெறவுள்ளது.
திகதி:-ஒக்டோபர் 13 சனிக்கிழமை
நேரம்:- 10-11 வரை
இடம்:-184/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி) இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட வேண்டாம்.
குறிப்பு:- மட்டுப்படுத்தப்பட்ட 50 ஆசனங்கள் மட்டுமே !! உங்களது பெயர், விலாசத்தை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு (SMS) அனுப்பி உங்கள் ஆசனத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். (சி/1276)

தொடர்புகளுக்கு:- 0770784428
மீண்டும் இலவச அழகுக்கலை பயிற்சியின் புதிய வகுப்புக்கள் அன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளன!!!

கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1984 இந்து<br>நட்சத்திரம்:-பரணி 2<br>உயரம்:-5'8"<br>கி.பா:-40.75, 12 இல் செவ்<br>தொழில்:-படவடிவமைப்பாளர் (இந்தியா)<br>B/573 | பிறப்பு:- 1983 இந்து<br>நட்சத்திரம்:- உத்தரம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-34.5, 2 இல் செவ்<br>தகைமை:-A/L கணனி<br>G/250 |
| பிறப்பு:- 1956 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-30.5, 2 இல் செவ்<br>தொழில்:-தனியார் வங்கி ஊழியர்<br>B/574 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா:-35, 12 இல் செவ்<br>தொழில்:சொந்த வியாபார கடை நிர்வாகி<br>G/255 |
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-கேட்டை 1<br>உயரம்:-5'3"<br>கி.பா:-16, 4 இல் செவ்.<br>தொழில்:-சொந்த நகைக்கடை<br>B/575 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மூலம் 4<br>உயரம்: 5'1"<br>கி.பா:- 6.5<br>தொழில்:- அரச பட்டதாரி ஆசிரியை<br>G/256 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவோணம்<br>உயரம்:-5'6"<br>கி.பா:-40.25, 8 இல் செவ்<br>தொழில்:-Computer Programmer<br>B/576 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கார்த்திகை 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:-48, 8 இல் செவ்<br>தகைமை:- O/L<br>G/257 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேசசபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்யும் நோக்குடன் ஊர்காவற்றுறை பிரதேச சபையானது ஊர்காவற்றுறை,நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு பொது நூலகங்களூடாக பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்துடன் பிரதேச மாணவர்களிடையேயும் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையேயும் பல்வேறு போட்டிகளை நடத்தவும் உத்தேசித்துள்ளது.

இதற்கமைய தரம் ஒன்று தொடக்கம் 3 வரையில் கல்வி கற்கும் மாணவர்கள் கதை சொல்லும் போட்டியில் பங்கேற்க முடியும். இம் மாணவர்கள் தாமாகவே ஒரு தலைப்பை தெரிந்தெடுத்து தயார் செய்து 5 நிமிடங்கள் வரை கதை கூற வேண்டும்.

பேச்சுப் போட்டியானது தரம் 4 தொடக்கம் 5 வரையில் கல்வி கற்கும் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது. இப் பேச்சுப் போட்டி 5 நிமிடங்கள் வரை இடம்பெறும்.

இப் போட்டிக்கு நான் விரும்பும் பெரியார், வாசிப்பை நேசிப்போம், எனது ஊர் ஆகிய தலைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. இத் தலைப்பினை உள்ளடக்கியே மாணவர்களின் பேச்சு அமைய வேண்டும்.

சித்திரப்போட்டியானது தரம் 6 தொடக்கம் 8 வரை கல்வி பயிலும் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது. இப் போட்டியானது வாசிப்பு, புத்தகம், நூலகம் ஆகிய தலைப்பினை வைத்து வரைதல் வேண்டும்.

கட்டுரைப் போட்டியானது இரு பிரிவுகளாக கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என பிரிக்கப்பட்டு நடைபெறவுள்ளது. இதில் கீழ்ப்பிரிவு போட்டி தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையில் கல்வி கற்கும் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் நவீனத்துவ சூழலில் வாசிப்பும் இணையத்தளமும், வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான், கல்வியும் வாசிப்பும், நூல்களே நல்ல நண்பர்கள் ஆகிய தலைப்பின் கீழ் கட்டுரை வரையப்பட வேண்டும்.

மேற்பிரிவு மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டியானது தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை கல்விகற்கும் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது. மேற்பிரிவு மாணவர்கள் வளமான வாழ்வும் மானிடத்தின் மேம்பாடும், வாசிப்பும் சிந்தனை ஆற்றலும், வாசிப்பும் மொழியாற்றலும், புத்தகங்களே சிந்தனையின் திசைகாட்டிகள் ஆகிய தலைப்பின் கீழ் கட்டுரை வரையப்பட வேண்டும். அத்துடன் பொது அறிவுப் போட்டி நூலக அங்கத்தவர்களுக்கு மட்டும் நடத்தப்படவுள்ளது.

இப் பொதுஅறிவுப் போட்டியில் பொது அறிவை உள்ளடக்கிய 40 வினாக்களைக் கொண்ட வினாத்தாள் வழங்கப்படவுள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்க விரும்புபவர்கள் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களை பிரதேச சபையின் பொதுநூலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.அத்தோடு போட்டிக்கான நேர அட்டவணைகள் பாடசாலை ரீதியாக அனுப்பிவைக்கப்படும்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் எழுவைதீவு பொது நூலகத்தில் நடைபெறும் இறுதி நிகழ்வின் போது வழங்கப்படுமென ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் சு.சுதர்ஜன் அறிவித்துள்ளார். (அ-2-9)

## க.பொ.த.[சா/த] மாணவர்களுக்கு இலவச வகுப்பு

றூத் நிறுவனத்தினால் இவ்வருட க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள ஜெயபுரம் கிராம மாணவர்களுக்கான இலவச வகுப்பு பிரதி சனி, ஞாயிறு திங்கட்கிழமைகளில் றூத் நிறுவன மண்டபத்தில் நடத்தப்படவுள்ளதாக றூத் நிறுவன நிர்வாகி அருட்சகோதரி கிலாரி ஜெயரத்தினம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சனி, ஞயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரையும் பி.ப 4 மணிதொடக்கம் பி.ப 5.30 மணி வரையும் திங்கட்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரை இலவச வகுப்பு நடைபெறவுள்ளது. எனவே கலந்து பயன்பெறுவிரும்புவோர் றூத் நிறுவன இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3)

## விஜயதசமி வகுப்புக்கள்

(கிளிநொச்சி)

கிளி/முருகானந்தா கல்லூரியில் விஜயதசமி தினத்தை முன்னிட்டு மிருதங்கம், ஓகன், பியானோ, நடனம், சங்கீதம் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரியின் பிரதி அதிபர் அறிவித்துள்ளார்.

இவ் வகுப்புக்களில் பங்கேற்று பயிற்சி பெறவிரும்பும் மாணவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# மாற்றுக்கருத்துக்களை வெளியிடுவோர் ஒடுக்கப்படுகின்றனர் - சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் எதேச்சதிகார போக்கில் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். மாற்றுக்கருத்துக்களை வெளிப்படுத்துவோர் ஒடுக்கப்படுவதும் நீதின்றத் துறையை கட்டுப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்த நீதிச்சேவைகள் ஆணையாளர் மஞ்சுள திலகரட்ன தாக்கப்பட்டுள்ள அதே வேளை பாதாள உலகக்குழுவினருக்கு அடைக்கலம் வழங்கப்படுகிறது. மஞ்சுள திலகரட்னவிற்கு எதிராக அரசாங்கம் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

எனினும் இந்த முயற்சிக்கு இடமளிக்க கூடாது எனவும் மக்கள் அணிதிரண்டு எதிர்ப்பை வெளியிட வேண்டும். கொலையாளிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குண்டர்களை பாதுகாப்பது தொடர்பிலேயே முதலில் விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய துறைகளை சீர்குலைத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# கிளி. ம.உ. காரியாலயத்தில் காணாமல் போனோர் குறித்து அதிக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனிவுரிமை குழுவின் கிளிநொச்சி காரியாலயத்தில் காணாமல் போன முறைப்பாடுகளே அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய மனிதவுரிமை ஆணைக் குழுவின் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

போரின் போது பாதிக்கப்பட்ட மக்களின் மனிதவுரிமைகளினை கருத்திற் கொண்டு கிளிநொச்சியிலும் தனது சேவையினை யாழ்.மனிதவுரிமை பிராந்திய காரியாலயம் விஸ்தரித்திருந்தது.

இச் சேவை ஆரம்பிக்கப்பட்டு இரு வாரங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் தற்போது காணமல் போனவர்கள் தொடர்பில் 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஐவரும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலங்களில் காணாமல் போனதாக அவர்களின் பெற்றோரால் முறைப்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களிலும் காணாமல் போனமை தொடர்பிலான முறைப்பாடுகள் அதிகளவில் கிடைக்க கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன.

இதுவரை காலமும் காணாமல் போனவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படாதவர்களே தற்போது பதிவு செய்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (அ-4)

# நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினரின் நல்லதோர் உணவு செய்வோம், நூற்றாண்டு நீடூழி வாழ்க ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது நீரிழிவு தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட சமையல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதோடு நீரிழிவு சம்பந்தமான விழிப்புணர்வும் இடம்பெறவுள்ளது.இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பாலகுமாரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜாவும் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் பொது மக்களையும் கலந்து கொண்டு நீரிழிவு நோய் தொர்டர்பிலான விழிப்புணர்வினை பெற்றுக் கொள்ளுமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (அ-4)



மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுசரனையுடன் யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு சிரமதான ஏற்பாட்டு நிகழ்வு நேற்று காலை குருநகர் பிரதேச வைத்தியசாலையில் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அ.ஞானசோதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் திருமதி விஜிதா சந்திரகுமார் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.சிவச்சந்திரன் ,யாழ்.உதவி பிரதேச செயலர் செல்வி எஸ்.சுமித்ரா, யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பரிசோதகர் சமன்சிகேரா உட்பட பலர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடல் நீரேரியில் இறந்து குவியும் மீனினங்கள்

(சிலாவத்தை)

முல்லைத்தீவு நந்திக்கடல் வாவியில் நஞ்சு கலக்கப்பட்டதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்த வாவியில் வாழ்ந்த கோடிக்கணக்கான பெறுமதியுடைய மீனிணங்கள் அழிந்துள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இறந்துபோன மீன்கள் வாவியில் மிதந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தின் 10 ஆயிரம் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்று முன்தினம் இரவின் பின்னரே இந்த மீனினங்களின் மரணங்கள் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நந்திக்கடல் வாவியை நம்பியிருந்த வட்டுவாகல், கள்ளப்பாடு, முல்லைத்தீவு, வண்ணாங்குளம், புதுக்குடியிருப்பு கிராம மக்களே இந்த வாவியில் நஞ்சு கலக்கப்பட்டமையால் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

அத்துடன் தமக்கு நிவாரணங்களை பெற்றுத்தர வேண்டும் என்றும் கோரியுள்ளனர். மீனினங்களில் நச்சுத்தன்மை காணப்படுவதால் அதனை சீர்செய்து உரிய மீனினங்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு வருடமாவது செல்லும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடமும் முறையிடப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதிக்கும் முறைப்பாடு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கடற்படையை வலுப்படுத்த ஆழ்கடல் ரோந்து கப்பல்கள்

## கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் கடற்படையை வலுப்படுத்தும் நோக்கில் ஐந்து ஆழ்கடல் ரோந்து கப்பல்கள் வாங்கப்படவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாக கடற்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

இவற்றில் இரண்டு ரோந்துக் கப்பல்கள் ஒரு தரப்பிடம் இருந்து வாங்கப்படவுள்ளன. ஏனைய மூன்றும் வேறுவேறு தரப்புக்களிடம் இருந்து வாங்கப்படவுள்ளன.

இரண்டு ரோந்துக்கப்பல்களை வாங்குவதற்காக உடன்பாடு விரைவில் இறுதி செய்யப்பட்டு விடும். ஆழ்கடல் ரோந்துக்கப்பல்களின் ஆற்றலை பலப்படுத்திக் கொள்வது போருக்கு பிந்திய கால முன்னுரிமையாக இருக்கும். போருக்கு பிந்திய காலத்தில் கடற்படையை புறக்கணிப்பது மிகப் பெரிய தவறாக அமையும். இலங்கையின் கடல் எல்லை மற்றும் பொருளாதாரக் கடல் எல்லையில் சவால்களை எதிர்கொள்வதற்கு மேலதிக கலங்கள் எமக்கு தேவைப்படுகின்றன என கடற்படைத்தளபதி குறிப்பிட்டார். (அ-2)

# கூட்டமைப்பிற்கு எச்சரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திவிநெகும சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு இடையூறு ஏற்படுத்துமாயின் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தி 15 இலட்சம் மக்களுடன் யாழ்ப்பாணத்திற்கு செல்வோம் என ஒன்றிணைந்த சமுர்த்தி தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திவிநெகும சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு இடையூறு ஏற்படுத்த எதிர்க்கட்சிக்கோ வேறு தரப்பினருக்கோ தகுதி இல்லை என சமுர்த்தி தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே ஒன்றிணைந்த சமுர்த்தி தொழிற்சங்கம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. (அ)

# காட்டுக்குள் அகப்பட்ட பயணிகள் மீட்கப்பட்டனர்

மின்னேரியா காட்டுப் பகுதியில் அகப்பட்டுக்கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மின்னேரியா காட்டுப்பகுதியில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து கிரிஓயாவின் நீர்மட்டம் உயர்ந்தமையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட குழுவினர் நேற்று முன்தினமிரவு இங்கு அகப்பட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிக்கல்விச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர் வரும் 19 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.10 12

★1492-கொலம்பஸ் கரிபியனில் பஹாமாசை அடைந்தார். அவர் கிழக்காசியா வைத் தான் அடைந்ததாக எண்ணினார்.

★1582-கிரெகொரியின் நாட்காட்டி அறி முகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெறவில்லை.

★1654-நெதர்லாந்தில் டெல்ஃப்ட் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★1785-ரிச்சார்ட் ஜான்சன் என்பவர் தமிழ் நாட்டின் முதல் செய்திப் பத்திரிகையான மெட்ராஸ் கூரியர் என்ற வார இதழை வெளியிட்டார்.

★1798- இலங்கை பிரித்தானியாவின் அரச குடியேற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. பிரெடெரிக் நோர்த் ஆளுந ராக ஆக்கப்பட்டார்.

★1899- தென்னாபிரிக்காவின் போவர் குடியரசு இங்கிலாந்து மீது போரை அறிவித்தது.

★1915-முதலாம் உலகப் போர்: கூட்டுப்படைகளை பெல்ஜியத்தில் இருந்து தப்ப உதவியமைக்காக பிரித்தானியத் தாதி எடித் கவெல் என்பவர் ஜேர்மனியர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1918-மினெசோட்டாவில் கிளம்பிய காட்டுத்தீயினால் 453 பேர் உயிரிழந் தனர்.

★1941-உக்ரேனின் தினிபுரோபெத் ரோவ்ஸ்க் நகரில் இந்நாளிலும் இதற்கு அடுத்த நாளிலும் நாசி ஜேர்மனியினர் 11 ஆயிரம் யூதர்களைக் கொன்றனர்.

★1964-சோவியத் ஒன்றியம் வஸ்கோத் 1 விண்கலத்தை விண்ணுக்கு ஏவியது. இதுவே பல விண்வெளி வீரர்களை விண்ணுக்குக் கொண்டு சென்ற முதலாவது கப்பலாகும்.

★1968-எக்குவட்டோரியல் கினி ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1976-மறைந்த மாசே துங்கின் இடத்திற்கு ஹுவா குவோஃபெங்க் என்பவரை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக நியமிப்பதாக மக்கள் சீனக் குடியரசு அறிவித்தது.

★1984-ஐ.ஆர்.ஏ. குண்டுவெடிப்பில் இருந்து மாகிரெட் தாட்சர் காயமெதுவும் அடையாமல் உயிர் தப்பினார்.

★1994-மகெலன் விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்தை அடைந்ததை அடுத்து அதனுடனான தொடர்பு களை நாசா இழந்தது. இது அடுத்தடுத்த நாட்களில் எரிந்து சேதமடைந்தது.

★1999-பாகிஸ்தானில் இடம்பெற்ற இரத்தம் சிந்தாப் புரட்சியில் பர்வேஸ் முஷாரப் நவாஸ் ஷெரீப்பை ஆட்சியில் இருந்து அகற்றி நாட்டின் ஜனாதிபதியானார்.

★1999-உலகின் மக்கள் தொகை 6 பில்லியனை எட்டியது.

★2001-அமைதிக்கான நோபல் பரிசு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

★2002- பாலியில் இரவு விடுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 202 பேர் உயிரிழந்ததுடன் 300 பேர் காயமடைந்தனர்.

★2003- பெலாரசில் மனநோய் வைத்திய சாலை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 30 மனநோயாளர் உயிரிழந்தனர்.

★2005- சீனாவின் இரண்டாவது ஆட்களுடன் கூடிய விண்கலம் சென்ஷோ 6 இரண்டு விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.

### பிறப்புக்கள்

★1891-எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (இ.1956)

★1921-ஆர்ட் குலொக்கி, களிமண்ணால் செய்யப்படும் இயங்குபடங்களின் முன்னோடி (இ.2010)

★1918-கே.கே.பிர்லா, இந்தியாவின் தொழிலதிபர் (இ.2008)

★1935-லூசியானோ பாவ்ராட்டி, இத்தாலியப் பாடகர் (இ.2007)

### இறப்புக்கள்

★1605-பேரரசர் அக்பர், முகலாயப் பேரரசின் மன்னர் (பி. 1542)

★1870-ராபர்ட் ஈ லீ, அமெரிக்க இராணுவத் தளபதியும் பொறியியலாளரும் (பி.1807)

★1924-அனத்தோலி, பிரான்ஸ் பிரெஞ்சு எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1844)

★1965-போல் ஹேர்மன் முல்லர், சுவிட்சர்லாந்து வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)

★1999- வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர் (பி.1936)

### எஸ்.வையாபுரிப் பிள்ளை



**வாழ்க்கைச் சுருக்கம்**

வையாபுரிப்பிள்ளை நெல்லை மாவட்டத்தில் உள்ள சிக்கநரசய்யன் பேட்டை என்ற ஊரில் 1891 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி சரவணப்பெருமாள்– பாப்பம்மாள் தம்பதிக்குப் பிறந்தார். இவர் பாளையங்கோட்டை புனித சவேரியர் பாடசாலையிலும் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியிலும் பின்னர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றார். அந்த ஆண்டு சென்னை மாகாணத்திலேயே தமிழில் மிக அதிக மதிப்பெண்கள் பெற்று சேதுபதி தங்க மெடல் (பதக்கம்)பெற்ற பெருமைக்குரியவர் ஆனார்.

**தமிழாய்வு**

1936 ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக விளங்கினார். 1946 வரை அப்பணியில் சிறப்பாகச் செயற்பட்டு பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார்.

வையாபுரிப்பிள்ளை திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தைப் பொற்காலம் என்று கூறுவார்கள். அவரது வீட்டில் இருந்த நூலகத்தில் மட்டும் 2 ஆயிரத்து 943 புத்தகங்கள் இருந்தன. அது மட்டுமல்லாமல் ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, ஜேர்மன், மலையாளம் போன்ற மொழிகளிலான குறிப்புகளும் ஓலைச்சுவடிகளும் நூற்றுக்கணக்கில் அவை அனைத்தையும் கொல்கத்தாவில் இருந்த தேசிய நூலகத்துக்கு நன்கொடையாக அளித்து விட்டார் வையாபுரிப்பிள்ளை. நாற்பதுக்கும் அதிகமான நூல்களையும் நூற்றுக்கணக்கான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதினார்.

**மறைவு**

வையாபுரிப்பிள்ளை 1956 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி தனது 65 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி விசாக்களை தயாரித்தவர் கைது

(கொழும்பு)

இந்திய இளைஞர்களுக்கு போலி விசாக்களை தயாரித்து மலேசியாவுக்கு தொழில் வாய்ப்புக்களுக்காக அனுப்பி வந்த சிங்களவர் ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவின் பஹார்கான்ச் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டின் பின்னர் அவர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து இளைஞர்களை மலேசியாவுக்கு சட்டவிரோதமாக அனுப்பும் வேலைகளை மேற்கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவில் உள்ள தமது சகோதரரின் பழரசம் செய்யும் தொழிற்சாலைஒன்றுக்கு குறித்த இளைஞர்களை அனுப்பி வைத்துள்ளார். இதற்காக அவர் ஒன்று தொடக்கம் 2 இலட்சம் ரூபாய்கள் வரையில் பெற்று வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் போலியான விசாவுடன் அனுப்பப்படும் இளைஞர்கள் மலேசியா வில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் கடந்த முதலாம் திகதி இது தொடர்பில் பெண் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தி ருந்தார். இதன் பின்னரே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# இலங்கை தமிழர்கள் அகதிகள் அல்ல; அதிதிகள்

## கவிஞர் வைரமுத்து தெரிவிப்பு

தமிழ்நாட்டு அரசாங்கமோ தொண்டு நிறுவனங்களோ தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களோ யாராக இருந்தாலும் அகதிகளாக நடத்தக்கூடாது. அவர்களை அதிதிகளாக அதாவது விருந்தாளிகளாக நடத்த வேண்டும் என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதியைப்பற்றி சொல்லும் கதை நீர்ப்பறவை படமாகும். இப்படத்தில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படும் கொடூரம் இடம் பெறுகிறது.

இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை சென்னையில் நடைபெற்றது. இப்படத்திற்கு பாடல்களை கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார். இவ் விழாவில் பங்கேற்று உரைநிகழ்த்திய அவர் இந்த படம் ஒரு முக்கியமான விடயத்தை தொட்டுப் பேசுகிறது.

இலங்கை கடற்பரப்பில் படகினுள் சுடப்பட்டு கிடந்த ஒரு உடலுக்கு பக்கத்தில் வீறிட்டுக் கிடக்கின்ற ஒரு சிறுவன் கடலில் அநாதையாகிறான். அவன் தமிழ்நாட்டு கரையில் வளர்கிறான். இது தான் கதை.

இப்படத்திற்கு நான் எழுதியிருக்கும் பாடலில் தமிழ்நாட்டு அரசாங்கமாக இருக்கட்டும் தொண்டு நிறுவனங்களாக இருக்கட்டும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களாக இருக்கட்டும் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தார்கள் என்று சொல்லவேண்டாம். இடம்பெயர்ந்தவர்கள் என்று சொல்லுங்கள்.

அகதி என்றால் ஏதுமற்றவர். அதிதி என்றால் விருந்தாளி. நாம் அவர்களை விருந்தாளிகளாக நடத்த வேண்டும். வந்தவர்கள் திரும்பி போய்விடுவார்கள் என்றார். (அ-2)

# சிராணிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படமாட்டாது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேற்றப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தையும் பிரதம நீதியரசரையும் மோதச் செய்யும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் செய்யப்படுவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றும் எந்தவிதமான திட்டமும் கிடையாது. நீதிமன்ற கட்டமைப்புடன் மோதிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

எந்தவொரு குற்றச்சாட்டு தொடர்பிலும் சாட்சியங்கள் இருக்க வேண்டும். வெறுமனே ஊகங்களின் அடிப்படையில் கருத்து வெளியிடப்படக்கூடாது.

ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றால் அந்தக் குற்றச்சாட்டை உடன டியாக யார் மீதேனும் சுமத்துவது. நியாய மற்றது. அரசாங்கம் நீதிமன்றத்தை மதித்து செயற்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# ஸ்ரீ அம்மா பகவான் சந்தான லக்சுமி பூஜை

ஸ்ரீ அம்மா பகவான் அனுக்கிரக அஷ்டலக்சுமி பூஜை கடந்த செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. இதற்கமைய இப்பூஜையின் சந்தானலக்சுமி பூஜை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுழிபுரம் அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையம், கொக்குவில் சற்சங்க நிலைய வேதநாயகி இல்லம், கே.கே.எஸ் வீதி சிவலிங்கப்புளியடியிலமைந்துள்ள, யாழ்ப்பாண சற்சங்க நிலையம், சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவில் மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

உறவுகளில் அன்பும் ஆனந்தமும் மலர இருதயத்தில் அன்பை காணவும் திருமணத் தடைகள் நீங்கித் திருமணம் கைகூட, மாங்கல்ய தோசம் நீங்க, மாங்கல்யம் பலம்பெற, புத்திர பாக்கியம் கிடைக்க இப் பூஜையில் கலந்து பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட சற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது. (அ-9)

# காணிக் கச்சேரி

காணி நிர்வாக திணைக்களத்தினாலும் காணி அமைச்சினாலும் நடமாடும் காணிக்கச்சேரி பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப 3 மணிவரை நடைபெறும் என பூநகரி பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்த குமார் அறிவித்துள்ளார். இந்நடமாடும் காணிக்கச்சேரியில் காணி தொடர்பான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவுள்ளதால் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(அ-3)

# மாகாண மட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டி முடிவுகளை முன்னாள் வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கவிதை**

**தரம் 3**

ரிசேரா சேவியர் (மன்/ சென் சேவியர் பெண்கள் கல்லூரி), கா.சயனிகா (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சு. மெலினா கரோலின் பேர்னாட் (வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தரம் 4**

சு.சாம்பவி (யா/சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி),பா.டில்றுக்சி (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), வா.வியாகினி (வவு/ சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

**தரம் 5**

ம.அபிநயா (யா/நெல்லியடி மெ.மி. த.க. பா),ஜெ.ஜெனுசா (மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரி), சி.சிவாம்சன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை)

**தரம் 6**

கி.நிருஜன் (மன்/சென் சேவியர் ஆண்கள் கல்லூரி), கிரகொரி ஆரொன் மெல்வின் (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி), டா.டானுசன் பெர்னாண்டோ (மன்/சென் ஆன்ஸ் மெ.மி.வித்தியாலயம்)

**தரம் 7**

உ. விதுசன் (யா/யாழ்.இந்து கல்லூரி), ஜெ.ஜெகதீபிகா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை),வா.வராகி (வவு/சைவப் பிரகாச பெண்கள் கல்லூரி)

**தரம் 8**

கி.கம்சாயினி (யா/இராமநாதன் கல்லூரி), பு.தேனுஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),கு.சனுஜா (வவு/சைவப் பிரகாச பெண்கள் கல்லூரி)

**தரம் 9**

றெனிசியஸ் பெர்னாண்டோ (மன்/சென். ஆன்ஸ் மெ.மி.வித்தியாலயம்), ஜெ.நிக்கலஸ் சர்வியோ (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி), சி.விசாகி (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

**தரம் 10**

து.சரோன் திவ்யா (யா/சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி), ஜோ.மேரி நிவேதிககா( மன்/ சென் ஆன்ஸ் மெ.மி.வித்தியாலயம்), த.நிகாசினி (மன்/சென். சேவியர் பெண்கள் கல்லூரி)

**தரம் 11**

க.ஹன்னாநரசா (யா/சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி),பு.சாகித்யா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்),ய.கர்சிகா (கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

**முன்னாயத்தம் செய்து உரையாற்றுதல்**

**தரம் 12**

கி.விவேக்வினுசாந் (யா/யாழ்.இந்துக் கல்லூரி), த.அபர்ணா (யா/யாழ்ப்பாண கல்லூரி), சி.மேகலாதரன் (வவு/வுவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

**தரம் 13**

பு.ஜனந்தன் (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), [illegible].மேரி ஜெனின் (யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), ச.சனுபரா (வவு/ முஸ்லிம் மகா வித்தியாலயம்)

**உடன்தயாரித்து உரையாற்றுதல்**

**தரம் 12**

பி.குணவரன் (யா/யாழ். இந்துக்கல்லூரி),கு.கீர்த்தனா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை),ப.சயாகி (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தரம் 13**

பு.ஆனந்தசயன் (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இ.பிரணவன் (யா/யாழ்.இந்துக்கல்லூரி),தெ.தனுஜா (வவு/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தனிநபர் நடிப்பு**

**தரம் 10**

கி.கிறிஸ்ரிகாபிரியங்கா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்),க. தனுசயன் (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்),சி.சஞ்சீவன் (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி)

**தரம் 11**

அ.நிக்கலின் ஸ்ரனிசா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடாலை), பு.சாகித்தியா (வவு/ இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்), த.யதுசா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தரம் 12**

கா.மேரிமொய்ரா (மன்/சென் சேவியர் பெண்கள் கல்லூரி), பே.டெனிசன் (யா/யாழ். இந்துக்கல்லூரி),பு.தர்மிகா (வவு/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

**தரம் 13**

நா.கிறிஸ்சிகா (யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி),

**உரத்து வாசித்தல்**

**தரம் 3**

ட.அக்சிகா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்),த.சயாகி (யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), பே.மெலினாகரோலின்(வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

**தரம் 4**

சூ.காயத்திரி (யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ப.நடாறுவைம் (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி),சி.மதுமிதா(யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)

**தரம் 5**

க.அருள்மொழி (யா/சென்.ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்),கு.டர்சிகா (வவு/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம்), லோ.சாள்கிரன் (யா/யாழ்ப்பாண கல்லூரி)

**கதைகூறல்**

**தரம் 6**

சு.சாருஜன் (வவு/ வவுனியா தமிழ் மத்திய மகா வித்தீயாலயம்), த.லக்சிகா (மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), ஆ.சைனுகா (யா/திருக்குடும்ப கன்னியர்மடம்)

**தரம் 7**

யோ.சாம்பவி (யா/மொதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),ஜெ.ஜெகதீபிகா (யா/வேம்படி பெண்கள உயர்தர பாடசாலை), கா.யுகேஸ் (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

**தரம் 8**

கு.பவித்திரா (யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை),கோ.மாதங்கி (யா/யாழ்ப்பாண கல்லூரி), கோ.கரிகரன் (மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி)

**தரம் 9**

பா.ஆரணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜே.றொக்சன் (மன்/சென். சேவியர் ஆண்கள் கல்லூரி), கோமேஸ் லினுகா (மன்/சென். சேவியர் பெண்கள் கல்லூரி). (தொடரும்) (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

# மகா பராக்கிரமபாகு



கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

## மகாபராக்கிரமபாகு

பராக்கிரமபாகு இலங்கை முழுமைக்கும் அதிபதியாகிய நிலையில் மக்களுக்கும் மதத்துக்கும் பல நன்மைகள் செய்யத்தொடங்கினான்.




பராக்கிரமபாகு மன்னனின் உருவச்சிலை

முன்னைய ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருந்த வரிச்சுமைகளைக் குறைப்பதில் கவனம் செலுத்தினான். பௌத்த பிக்குகளுக்குத் தானம் முதலான வசதிகளைத் தொடர்ந்து குறைவின்றிக் கிடைக்க ஒழுங்குகள் செய்வித்தான். பௌத்தத்தில் இதுவரை காலமும் நிலவிவந்த மூன்று மதப்பிரிவுகளையும் சேர்ந்த பிக்குகளை அழைத்து அவர்களிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்த முயன்றான். நகரத்தின் மத்தியில் பெரியதொரு மண்டபத்தினை அமைத்து, அதில் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான பிக்குகளுக்கு தானம் அளிக்கும் தர்ம சாசனத்தை உருவாக்கினான். வருடாவருடம் பிக்குகளுக்குரிய துணிவகைகளை வழங்கி வந்தான். சகல வசதிகளும் கொண்டதான சாலைகள் நான்கினை நகரத்தில் அமைப்பித்தான். பாத்திரங்கள், பாய் படுக்கைகள், நூற்றுக்கணக்கான பாற்பசுக்கள், பூந்தோட்டங்கள், பழத்தோட்டங்கள் என்பனவும் வழங்கினான். வழிப் போக்கர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்குமாக அன்ன சத்திரங்கள் பலவற்றை அமைப்பித்தான். தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களைச் சேகரித்து வைக்கக் களஞ்சியங்களை அமைப்பித்தான். நாட்டிலுள்ள நோயாளர்களின் நலன்கருதி வைத்தியசாலை ஒன்றினை நிறுவினான். திறன்வாய்ந்த வைத்தியர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உதவிகளைப் பெற்றான். மாதத்தில் நான்கு நாட்களை சமய உபதேச நாட்களாக அனுஷ்டிக்க வைத்தான்.

நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்ற மன்னன் பின்னர் புலத்திநகரின் கோட்டையைத் திருத்துவித்தான். புறநகரைச் சுற்றிப் பலமான மதில் ஒன்றினை அமைப்பித்தான். அதில் கொத்தளங்களையும் அமைப்பித்தான். விஜேயந்தா என்றொரு புதிய அரண்மனையையும் விசுயகர்மாவின் கட்டமைப்பு என வியக்குமாறு அமைப்பித்தான். நூற்றுக்கணக்கான தூண்கள் மீது ஆயிரம் அறைகளுடன் ஏழு மாடிகள் கொண்டதாக அந்த அரண்மனை அமைந்தது. வேலைப்பாடுகளைக்கொண்ட கலசங்களை அது கொண்டமைந்தது. கதவுகளும் யன்னல்களும் தங்க வேலைப்பாடுகளைக் கொண்டமைந்தன. தங்கத்தாலும் தந்தத்தாலும் வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டில்கள் உயர்ந்த கம்பளங்களைக் கொண்டிருந்தன. அரசனின் அறை மிக அலங்காரமானதாக விளங்கியது. தங்க விளக்குகளும் முத்துத் தொங்கல்களும் அலங்கரித்தன என்றும் மெல்லிய இனிமையான சங்கீத வாத்தியங்களின் ஒலி அரண்மனை எங்கும் நிறைந்திருக்கும்.


அதனோடு பிராமணர்கள் தமது சடங்கு, கிரியைகள் என்பனவற்றைச் செய்வதற்குரிய தங்கமாளிகை ஒன்று, மந்திரச்சடங்குகள் ஆற்றுவதற்காக விஷ்ணுவுக்கு ஒரு கோயில், புத்தரின் யாதகக் கதைகளைக் கேட்டு மகிழ்வதற்காக வட்டவடிவான மாளிகை ஒன்று, புனித நீரும் புனித நூல்களும் வழங்குவதற்குரிய பஞ்சதத்தி மாளிகை, என்பனவும் அமைக்கப்பட்டன. சமய நெறிகளைப் போதிக்கும் தர்மஹறன் மாளிகை, எப்போதும் நெய் விளக்குகளும் வாசனத் திரவியத் தூபிகளும் கொண்டதாக விளங்கியது. சரஸ்சவதி மண்டபம் எனப்படும் சங்கீத அரங்கு, ராஜவேதி புஜங்கா எனப்படும் மூன்று மாடிகளைக் கொண்ட பொழுது போக்கு மண்டபம், தேவர்கள் எல்லாம் வந்து கூடியிருப்பதற்கான இருக்கைகள், தங்கத்தினால் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கற்பக தரு, ஒருதூணில் கட்டப்பட்ட அழகான மகர வேலைப்பாடுகள் கொண்ட மாளிகை ஒன்று, அரண்ம னையை அடுத்து நந்தவனம் ஒன்று, அதில் பலவகையான மலர் செடிகள் பழ மரங்கள், சிலைப்பொக்கணை, மங்கல பொக்கணை போன்ற நீராடு மன்றங்கள், எண்ணற்ற மண்டபங்கள் (சனி மண்டபம், மொனரா (மயில்) மண்டபம், கண்ணாடி மாளிகை), என்பனவும் அமைக்கப்பட்டன.



பராக்கிரமபாகு மன்னனின் தாமரைத்தடாகம்

பராக்கிரமபாகுவுக்கு அவனது மஹாராணியாக ரூபவதி அமைந்திருந்தாள். அவளைத் தவிர நூற்றுக்கணக்கான மகளிர் அரண்மனையில் இருந்தனர். ரூபவதி பௌத்தமும் மணிகளில் (புத்தம், சங்கம், தர்மம்) நம்பிக்கை கொண்டிருந்தாள். அவள் பல்கலை வல்லுநர் ஆவாள். வாழ்க் கையின் நிலையாமையை உணரந்தவள். நகரத்தின் மத்தியில் பெரும் தங்கப் பௌத்ததூபி ஒன்றினை அமைப்பித்தாள். மகாபராக்கிமபாகு நகரத்தின் பல்வேறு வீதிகளை அமைப்பித்தான். வீதிகளின் மருங்கே பல்வேறு கட்டடங்களைக் கட்டுவித்தான். பல்வேறு கடைத்தொகுதிகளை உருவாக்கினான். புலத்திநகர் வீதிகளெல்லாம் யானைகள், குதிரைகள், தேர்கள் என்பவற்றாலும் பாதசாரிகளாலும் நிரம்பி வழியும் இராஜவேதி புஜன்ஹா, இராஜாகுலன்தகா, விஜித்தா ஆகிய மூன்று புறநகர்களை அமைப்பித்தான். வேலுவணா, இசுப்பத்தானா, குஷினறா எனும் மூன்று விகாரைகளை நகரத்தில் கட்டுவித்தான். அவற்றுடன் மூன்று தேவாலயங்களையும் கட்டுவித்தான். அரச அரண்மனைக்கும் புதிதாக நிறுவிய நகரங்களுக்குமிடையில் ஒவ்வொரு லீக் தூரம் இருந்தது. அவற்றிடையே மூன்று பெரும் விகாரைகளையும் தியான மண்டபங்களையும் தங்குமிடங்களையும் புத்தரின் சிலைகள் அமைந்த சிறிய மண்டபங்களையும் நிறுவினான். புலத்திநகரைச் சுற்றி மதில்களும் கோபுரங்களும் அமைப்பித்து அரசவாயில், சிங்க வாயில், இந்திரவாயில் என 14 வாசல்கள் வைப்பித்தான் என சூளவம்சம் கூறிச் செல்கிறது.

மகாபராக்கிரமபாகு அதன் பின்னர் சோழர்களால் சிதிலமாக்கப்பட்ட பிரதான நகரமான அனுராதபுரத்தைப் புணருத்தாரணம் செய்ய விருப்பங் கொண்டான். போதி மரத்தையும் புனித சின்னங்களையும் பாதுக்காக்க விரும்பி, அவற்றிற்கான திருத்த வேலைகளைச் செய்விக்குமாறு அமைச்சர் ஒருவனை அனுராத புரத்திற்கு அனுப்பி வைத்தான். அங்கு வந்த அமைச்சர் அனுராதபுரத்தில் புணர்நிர்மானத்தைச் செய்யத் தொடங்கினார். கோட்டை மதில்கள், கோபுரங்கள், கொத்தளங்கள், வீதிகள், பூங்காக்கள், தடாகங்கள் என்பவற்றை அமைச்சர் திருத்தி அமைத்தார். அதன்பின்னர் ரூவான் வெலிசாயாச் சேத்தியத்தையும் ஏனைய சேத்தியங்களையும் திருத்தி வித்தான். மூன்று பௌத்தமதப் பிரிவுகளைளுக்குமுரிய சேத்தியங்களையும் (மகாவிகாரை, ஜேத்தவன விகாரை, அபயகிரிவிகாரை) லோக பாசடா கட்டடத்தையும் ஏனைய விகாரைகளையும் திருத்திவித்தான். அரசமாளிகையையும் திருத்தியமைத்தான். முன்னைய அரசர்களின் காலத்தில் இருந்தவாறு அனுராதபுரத்தைப் புதிய நகராக்கினான். இலங்கையின் வரலாற்றுக் காலப் பெரும் நீர்த்தேக்கமான பராக்கிரம சமுத்திரத்தை இவன் அமைப்பித்தான். தோபாவாவி, தும்புட்டுதுவாவி, ஏரம்பதுவாவி ஆகிய மூன்று குளங்களை இணைத்துப் பராக்கிரம சமுத்திரத்தை அமைப்பித்தான். பாலடைந்திருந்த பல நீர்ப் பாசனக்குளங்களைத் திருத்துவித்துள்ளான். வானிலிருந்து வீழ்கின்ற மழைநீரில் ஒரு துளியையேனும் கடலைச் சென்றடைய விட



பராக்கிரமபாகு மன்னனின் அரண் மனைத் தூண்களின் சிற்பங்கள்

மாட்டேன் என்பது பராக்கிரம பாகுவின் கொள்கை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சதி முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

## அமைச்சர் மைத்திரிபால கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான பாரிய சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நேற்று முன்தினம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

புலிகளும் வெளிநாடுகளின் சில பிரிவுகளும் இணைந்து இந்தச் சதி முயற்சியை மேற்கொண்டுள்ளன. சில அரசசார்பற்ற நிறுவனங்களும் இந்தச் சதி முயற்சிக்கு பங்களிப்பை வழங்கி வருகின்றன.

நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான பாரிய சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புலிகள் நேரடியாக யுத்தத்தின் மூலம் அடைய முயற்சித்த இலக்கை தற்போது யுத்தமின்றி வேறு வழியில் அடைவதற்கு முயற்சிக்கின்றனர்.

யுத்தத்தின் ஊடாக ஈழம் என்ற கனவை நனவாக்க முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. தற்போது வேறு வழியில் முயற்சிக்கின்றனர். இந்த சதி முயற்சியில் புலிகளும் வெளிநாடுகளின் சில பிரிவுகளும் இணைந்து இறங்கியுள்ளன. மேலும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த சதி முயற்சிக்கு பங்களிப்பை வழங்கி வருகின்றன. அதாவது நாட்டில் பதற்றமான சூழ்நிலை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்த்து தமது கனவை நனவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

நாட்டில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு சில சக்திகள் திட்டங்களை தீட்டுகின்றன. ஜனாதிபதி இருக்கும் வரை எதனையும் செய்ய முடியாது என்பதால் அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கப்படுகின்றது.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 30 வருடங்களாக நாட்டின் நலனுக்காக செயற்பட்டன. அதேநேரம் நாட்டை பிரிக்கும் முயற்சியில் கடந்த காலங்களில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சித்தன. அவ்வாறான சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போதும் அதே முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வாறான அரசசார்பற்ற நிறுவனங்களே புலிகளின் குறித்த வேறு வடிவிலான முயற்சிக்கு ஆதரவு வழங்குகின்றன. குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து நிதியை பெற்று வருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் குழப்பங்களை போன்று இங்கும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தி பதற்றமான சூழலை உருவாக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.

ஆனால் எமது அரசாங்கம் பொறுமையுடனும் ஒழுக்கத்துடனும் செயற்பட்டு சவால்களை முறியடித்து நாட்டை ஸ்திரப்படுத்துவதுடன் அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்லும்.

புலிகளின் ஈழக் கனவை நனவாக்குவதற்கு பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் சவால்களை தோற்கடித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல தயாராக இருக்கின்றோம் என்றார். (அ-2)

## பொன் விழாவும் மருத்துவ முகாமும்

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் புனித லூக்கா ஆலயத்தின் பொன்விழா நிகழ்வும் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட விசேட மருத்துவ குழுவின் பற்சிகிச்சையும் பொது மருத்துவமும் இன்று வெள்ளிக்கிழமைகாலை 8.30 மணி தொட க்கம் பி.ப.5 மணிவரை நடைபெறவுள் ளது.

நாளை சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நற்கருணை ஆராதனையும் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நன்றி வழிபாடும் நடைபெறவுள்ளதாக ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (அ-3-263)

## கழிவு உலோகங்களில் மின் உற்பத்தி செய்தல்

### அமைச்சர் டக்ளஸ் ஆராய்ந்தார்

கழிவு உலோகங்களிலிருந்து மீள் உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பிலான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு மருதானை அமைச்சில் அண்மையில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கைத்தொழில் பேட்டைகளிலிருந்து பெறப்படும் கழிவு உலோகங்களை துறை சார்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இதனிடையே இவ்வாறான கழிவு உலோகங்களை வழங்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளில் முக்கியமாக சிறுதொழில் முயற்சியாளர்களை உரிய முறையில் கண்டறிந்து பயனாளிகள் தெரிவு செய்யப்படல், உற்பத்திகளின் தரத்தை பேணுதல், விலைகளை தீர்மானிப்பதுடன் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் அவற்றுக்கான சந்தை வாய்ப்பை உரிய முறையில் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அந்தவகையில் அதற்குரிய முகாமைத்துவக்குழு குறிப்பிட்ட செயற்றிட்டத்தை நெறிப்படுத்துவதுடன் சிறுதொழில் முயற்சியாளர்களின் தொழிற்றுறைகளை மேம்படுத்துவது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை முன்னெடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (அ-2)



விசுவமடு எவரெஸ்ட் ஆங்கிலக் கல்வி நிலையத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எவரெஸ்ட் கல்வி நிலைய மாணவர்கள், விருந்தினர்கள், ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

## தேர்தல் மாற்றங்களை ஆதரிக்கிறோம்; சுயாதீன ஆணைக்குழுவை நியமியுங்கள்

### கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சி தேர்தல் மாற்றங்களை ஆதரிக்கின்றோம். ஆனால் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவினை நியமிப்பதன் மூலமே இதன் பலாபலன்களைப் பெறமுடியும் என ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஸ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சபையில் அவர் உரை நிகழ்த்துகையில்,

உள்ளூராட்சி சபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவை போன்று தேர்தல்கள் திணைக்களத்திற்கு அதிகாரங்களை வழங்க வேண்டும். சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலமே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்பார்க்க முடியும். அத்தோடு 17 ஆவது சட்டம் அமுல்படுத்தப்பட்டு அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்தியாவைப் போன்று தேர்தல்கள் ஆணையாளருக்கும் திணைக்களத்திற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்றார்.

அமைச்சர் விமல் வீரவன்ச கருத்து வெளியிடுகையில்,

விருப்புவாக்கு முறை குழப்பகரமானது. அதனை ஒழிப்பது சிறந்தது. தொகுதி ரீதியான தேர்தல் முறைமையால் மக்களுக்கு தமது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும்.

எனவே இம்மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி எடுத்த முயற்சி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உட்பட இதற்கான தெரிவுக் குழுக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என இங்கு உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ரோசி சேனாநாயக்க எம்.பி. கருத்து வெளியிடுகையில்,

உள்ளூராட்சி சபைகளில் பெண்ணின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. நல்லாட்சிக்கு பெண்களின் பிரதிநிதித்துவம் அத்தியாவசியமானதாகும் என்றார். (அ-2)

## மருந்தாக்கல் முதலீட்டுக்கு பாகிஸ்தானிற்கு அழைப்பு

(கொழும்பு)

இந்தியாவின் இரண்டு மருந்து விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் மருந்தாக்கல் துறையில் முதலீடு செய்வதற்கு பாகிஸ்தான் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் வர்த்தக குழுமத்தின் தலைவர் ரோகி த திலகரட்ன இந்த அழைப்பினை விடுத்துள்ளார்.

இலங்கையில் மருந்தாக்கல் கைத்தொழில் பேட்டை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், அதில் பாகிஸ்தானின் மருந்தாக்கல் துறையில் ஈடுபட்டுள்ளவர்களையும் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மருந்தாக்கல் துறையின் ஒரு கைத்தொழிலை உருவாக்கும் எண்ணத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் அமெரிக்காவும் நோர்வேயும் பேசின

## விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

**இலங்கை யுத்தக்குற்றச்செயல், குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது. நோர்வேக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி இந்தக்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

நோர்வேக்கான அமெரிக்க தூதுவர் க்ளைன்ட் வில்லியம்சனுக்கும் இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடிப்படையாக கொண்டு இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது குற்றச் செயல்கள் இடம்பெற்றனவா, குற்றச் செயல்களில் ஈடுபட்ட தரப்பினர் போன்ற விபரங்கள் தொடர்பில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இதில் யுத்த வலயத்திற்கு செல்வதில் பல்வேறு நெருக்கடி காணப்படுவதனால் ஆதாரங்களுடன் யுத்த நிலைமைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதில் சிக்கல் நிலவுவதாக அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய தரப்பினரிடமிருந்து அறிக்கை தயாரிக்க தேவையான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் அரசாங்க படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராயப்படும்.

சிறுவர் போராளிகளை படையில் இணைத்தல் மற்றும் பொதுமக்களை மனிதக் கேடயமாக பயன்படுத்துதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளது எனவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கில் பலவந்தமாக காணாமல் போதல்கள், அதிகார துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் இலங்கை யுத்தம் தொடர்பில் இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை யுத்தம் தொடர்பிலான தகவல்களை இரு நாடுகளும் பகிர்ந்து கொண்டுள்ளமை மிக முக்கியமான விடயமாக பார்க்கப்படுகிறது. (அ-8)

# போப் பாண்டவர் முதன்முறையாக அரபு மொழியில் பிரார்த்தனை

வத்திக்கானில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த சுமார் 20 ஆயிரம் வாராந்திர பார்வையாளர்களை போப் 16 ஆம் பெனடிக் முதன்முறையாக அரபு மொழியில் ஆசீர்வாதம் செய்தார்.

இப் பிரார்த்தனை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதுபோன்ற பிரார்த்தனை கூட்டத்தில் அரபு மொழி உச்சரிக்கப்பட்டது இதுவே முதல்முறை. போப்பின் ஆசீர்வாதத்தை ஆயர் ஒருவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

அரேபிய பார்வையாளர்களுக்காக போப் இப்போது பிரார்த்திக்கிறார். உங்கள் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கட்டும் என மொழிபெயர்ப்பாளர் கூறினார்.

இதன் பின்னர் பேசிய போப் இரண்டாவது வத்திக்கான் குழுவை பாராட்டினார். 50 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வழிகாட்டுக்குழு இப்போதும் அனைத்து பிரச்சினைகளின் மத்தியிலும் கத்தோலிக்க சபைகளுக்கு ஒரு திசை காட்டியாக திகழ்வதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

# தற்போதைய ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்-சோபித தேரர்

(கொழும்பு)

நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட தற்போதுள்ள ஜனாதிபதி முறைமை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தை சேர்ந்த மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை என அவர் கூறினார்.

நீதித்துறை அதன் சுயாதீனத்தை இழந்துவிட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினால் மக்கள் உயிராபத்துகளுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது சுயநலத்துக்காகவும் பதவியில் தொடர்ந்து இருப்பதற்காகவும் அரசாங்கம் நீதிமன்ற தீர்ப்புக்களையும் உதாசீனம் செய்கின்றது. இப்போது மக்கள் நீதித்துறையின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி நீதித்துறைக்கோ நாடாளுமன்றத்துக்கோ மக்களுக்கோ பொறுப்புக்கூற வேண்டியதில்லை. எனவே, சட்டம், ஒழுங்கை பேண வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# கிராண்ட்பாஸ் பகுதியில் கத்திமுனையில் கொள்ளை

## பட்டப்பகலில் துணிகரம்

(கொழும்பு)

கொழும்பு 14 கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் பட்டப்பகலில் வீட்டில் புகுந்து பணம், தங்க ஆபரணங்கள் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டுக்குள் நேற்று முன்தினம் பிற்பகல் நுழைந்த இனந்தெரியாத குழுவொன்று அவ்வீட்டில் தனிமையிலிருந்த மூதாட்டியின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீட்டிலிருந்த தங்க நகைகள் மற்றும் பணம் போன்றவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த குழுவினர் கறுப்பு நிறத்திலான எல்டோ ரக காரொன்றில் வந்துள்ளதுடன் இவர்களில் ஒருவர் மூதாட்டியின் கழுத்தில் கத்தியை வைத்து பயமுறுத்தியுள்ளார். அவரின் கழுத்திலிருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியை பறித்துள்ளதுடன் பணம், தங்க நகைகள் போன்றவற்றை கொள்ளையிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மூதாட்டியின் கூக்குரலை கேட்டு அயலவரொருவர் ஓடிவந்த வேளையில் அவரையும் குறித்த குழுவினர் தாக்கியுள்ளனர்.

இதன்பின்னர் வீட்டிலிருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையிட்ட அந்த குழுவினர் காரில் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இம்முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# தீர்வினை வழங்குவதற்கே தெரிவுக்குழு அமைப்பு

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வினை வழங்கும் திட்டத்தில் இருந்து பின்வாங்கவில்லை என வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமிழ் மக்களை கைவிட்டுள்ளதுடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வழங்கும் எண்ணமும் அரசாங்கத்திடம் இல்லை என்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்திய ஊடகம் ஒன்றுக்கு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டி இருந்தது.

குறிப்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் பயனற்ற ஒன்று என்றும் அரசியல் தீர்வு வழங்குவதாக கூறி காலம் கடத்தும் நோக்கில் இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அது குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களையோ அவர்களுக்கான அரசியல் தீர்வையோ ஒருபோதும் கைவிடவில்லை.

இந்த தீர்வினை வழங்கும் பொருட்டே நாடாளுமன்ற தெரிவுக்குழு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அதில் இணைந்து கொண்டு தீர்வினை வழங்க ஒத்தாசை புரிய வேண்டும். இதனைத் தவிர்த்து அரசாங்கத்தை குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என்றார். (அ-2)



சண்டிலிப்பாய் உபதபாலகத்தில் கடந்த 9 ஆம் திகதி உலக அஞ்சல் தின நிகழ்வுகள் உபதபாலக தபாலதிபர் ச.பிங்கலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட தபாலகத்தின் வாடிக்கையாளர்களுடன் தபாலக உத்தியோகத்தர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் இறுதிக்கணங்கள்

தாம் பல்வேறு யுத்தங்களைப் பார்த்ததாகவும் ஆனால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் பொதுமக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது போன்ற சம்பவங்களை பார்த்தது மிக அரிதாகும் என யுத்தம் நிறைவுற்ற பின்னர் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினர் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறு பிபிசி முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரீசன் கடந்த ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி இணையத்தளத்தில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினர் கடந்த 2009 இல் மேற்கொண்ட தீவிர யுத்தத்தின்போது வைத்தியசாலைகளை குறிவைத்து தாக்குதல்களை நடத்தியிருந்ததை வைத்திய கலாநிதி நிரோன் நன்கறிவார். வைத்தியசாலையை மாற்றுவது தொடர்பாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக இலங்கை இராணுவத்திடம் அறிவித்த ஒவ்வொரு தடவைகளிலும் குறிப்பிட்ட சில நாட்களில் வைத்தியசாலையை புதிதாக மாற்றிய இடங்களை வைத்து இலங்கை இராணுவத்தினர் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதாக நிரோன் கூறுகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்திற்குள் அகப்பட்டு காயமடைந்த மக்களை குணமாக்கிய வைத்திய கலாநிதி நிரோன் தற்போது அரசியல் தஞ்சம்கோரி அத்திலாந்திக் கரையோரத்திலுள்ள நாடொன்றில் வாழ்கிறார். தற்போது இவருடன் வாழும் ஏனைய அரசியல் அகதிகளுக்கு நிரோனின் கடந்த காலம் தெரியாது. ஆனால், வைத்திய கலாநிதி நிரோனால் குணப்படுத்தப்பட்டு தற்போது உயிருடன் வாழும் இலங்கையில் உள்ள மக்கள் பலர் இவரது உறவுகளைச் சந்தித்து தமது உயிரைக்காப்பாற்றியதற்காக நன்றிகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தான் எங்கே தப்பிச் சென்றதாக இலங்கையிலுள்ள தனது நண்பர்களிடம் அந்நாட்டு அதிகாரிகள் விசாரணை செய்து வருவதாக நிரோன் குறிப்பிட்டார்.

அவர்கள் என்னைத் தேடுகிறார்கள். எமது சாட்சியங்கள் எவ்வளவு மிக முக்கியதானது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என அவர் மேலும் விளக்கினார்.

இலங்கை இராணுவத்தால் 2009 இல் மேற்கொள்ளப்பட்ட மிகக் கொடிய யுத்தத்தின்போது யுத்தம் இடம்பெற்ற இலங்கையின் வடக்கில் வைத்தியரான கலாநிதி நிரோனும் (உண்மையான பெயரல்ல) சேவையில் ஈடுபட்டிருந்தார். இவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியாற்றிய போதிலும்கூட இலங்கை மத்திய அரசாங்கத்தால் பணிக்கமர்த்தப்பட்ட அரசாங்க வைத்தியராவார்.


இலங்கை இராணுவத்தினர் தமது முன்னேற்ற நடவடிக்கைகள் மூலம் விடுதலைப்புலிகளை இலங்கையின் கிழக்கு கரையோரப் பகுதி நோக்கி விரட்டியடித்தனர். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட யுத்தம் மூலம் இறுதியில் விடுதலைப்புலிகள் மிக ஒடுங்கிய [illegible] தம்வசம் கொண்டிருந்தனர்.


இரு தரப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட இறுதி ஐந்துமாத யுத்தத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என ஐ.நா. புள்ளிவிபரம் சுட்டிக்காட்டுகின்றது. யுத்தத்தில் பங்குகொண்ட இருதரப்பு யுத்தக் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்ததற்கான சாட்சியங்கள் உள்ள போதிலும் இலங்கை அரசாங்கமானது அனைத்துலக சட்டத்தை மீறி இவ்வாறான பாரிய குற்றங்களை மேற்கொண்டதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சட்ட வல்லுனர்கள் இலங்கையை எச்சரித்திருந்தனர்.

> **வைத்தியக் கலாநிதி நிரோன் போன்று யுத்தத்திலிருந்து மீண்டவர்களின் மனவடுக்கள் ஆழமானவை. இவற்றை இலகுவில் மறப்பதென்பதும் மன்னிப்பதென்பதும் முடியாத காரியமாகும். இரத்தம் தோய்ந்த இலங்கையின் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களைப் புரிந்து கொள்வதென்பது முக்கிய தேவைப்பாடாக உள்ளது.**



ஃபிரான்சிஸ் ஹாரீஸன்





நிரோன் யுத்த வலயத்தைவிட்டு வெளியேறுவதற்கான பல சர்ந்தப்பங்களைக் கொண்டிருந்த போதிலும் தான் தனது நோயாளிகளை குணப்படுத்த வேண்டும் என்கின்ற கடமையுணர்வுடன் தொடர்ந்தும் அங்கிருந்ததாக கூறுகிறார். யுத்த வலயத்தைவிட்டு வெளியேறாவிட்டால் மாதாந்த கொடுப்பனவு நிறுத்தப்படும் என இலங்கை அரசாங்கம் எச்சரிக்கை விடுத்த போதிலும்கூட அதனைப் பொருட்படுத்தாது தனது நோயாளிகளின் நலனுக்காக வைத்திய கலாநிதி நிரோன் தொடர்ந்து யுத்த வலயத்தில் சேவையாற்றினார்.

யுத்த முன்னரங்குகள் மேலும் முன்னோக்கி வந்துகொண்டிருந்த போது, தனது வைத்தியசாலையை தொடர்ந்து அதேஇடத்தில் இயக்க முடியாத நிலையில் வைத்திய கலாநிதி நிரோன் பொதுக்கூட்டங்கள், வீடுகள், கூடாரங்கள் போன்றவற்றில் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டார்.

இறுதியில் மிக ஒடுங்கிய நிலப்பரப்புக்குள் பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் சிறைப்பிடிக்கப்பட்ட போது நிரோன் தனது வைத்திய [illegible]ங்களுக்கு கீழ் வைத்து நடாத்தினான்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி உடையார்கட்டு வைத்தியசாலையில் தன்னுடன் கூடப் பணியாற்றிய மருத்துவதாதி ஒருவர் எறிகணை வீச்சில் படுகொலை செய்யப்பட்டதாக நிரோன் மனவேதனையுடன் நினைவு கூறுகிறார்.

இதேபோன்று தன்னுடன் பணியாற்றிய மேலும் பலர் கொல்லப்பட்டனர். அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட ஜனவரியின் இறுதி பத்து நாட்களில் மட்டும் 2000 எறிகணைகள் வீசப்பட்டதாகவும் நிரோன் கூறுகிறார்.

யுத்த வலயத்தில் பெருமளவான நோயாளிகளுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. ஆனால், முக்கிய மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தன.

பொதுவாக புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பொது வைத்தியசாலைக்கு இலங்கை அரசாங்கமே மருந்துப் பொருட்களை வழங்கி வந்தது. ஆனால், யுத்தம் தீவிரமடைந்தபோது தனது எதிரியிடம் மக்கள் அனுதாபம் காட்டலாம் என்ற நோக்கத்தில் பொதுமக்களுக்கான மருந்துப் பொருட்களை அனுப்புவதில் இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

இலங்கை அரசாங்கம் பனடோல் விற்றமின் போன்ற சில பொதுவான மருந்துப் பொருட்களை மட்டுமே அனுப்பியது. வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்த போதிலும்கூட காயமடைந்த பொது மக்களுக்கு தேவையான மருந்துப் பொருட்களை இலங்கை அரசாங்கம் அனுப்பவில்லை. காயமடைந்த பொதுமக்களுக்கு தேவையான மருந்து வழங்கலை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதானது நீதிக்குப் புறம்பான செயலாகும் என இராஜதந்திரிகள் எச்சரிக்கை விடுத்திருந்ததை 2009 மார்ச் இல் விக்கிலீக்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்து.

இலங்கை அரசாங்கத்தை குழப்பும் நடவடிக்கையில் வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டு, தமக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டதாக யுத்த வலயத்தில் கடமையாற்றிய வைத்தியர்கள் வெளிப்படையாக முறையிட்டனர்.... (தொடரும்)

நன்றி: [illegible]யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ உழைத்த மகான்



கல்லூரி என்றால் அது மத்திய கல்லூரி, அதிபர் என்றால் அமரர் இராஜதுரை என்று கவிதை பாடவேண்டும் போல் உள்ளது. சகல கல்லூரிகளும் சிறப்பினவைதான். இருப்பினும் யாழ். மத்திய கல்லூரிக்கு ஒரு மகத்துவம் இருக்கிறது. அவ்வாறே சகல அதிபர்களும் சிறந்த நிர்வாக அதிகாரிகள் தான். இருந்தாலும் அமரர் க.இராஜதுரைக்கு ஒரு தனித்துவம் இருக்கிறது.

'Jaffna Central College' இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதற்குக் காரணம் என்ன? இரு விடயங்களைக் கூறலாம்.

1. தலைசிறந்த மாணவர் பரம்பரை உலகெங்கும் உள்ளது.

2. தரமான அதிபர்களை ஆண்டாண்டு காலமாகக் கொண்டுள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் விடிவெள்ளியாகப் பலராலும் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், ஆசியா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற எதிர் வீரசிங்கம், பத்திரிகைத் துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வலம்புரி ந.விஜயசுந்தரம், சிதைந்த தமிழர் பகுதிகளை மீளக் கட்டியமைத்துக் கொண்டிருக்கும் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா என பெயர் சொல்லக்கூடிய பல பழைய மாணவர்கள் இக் கல்லூரிக்குப் பெருமை சேரக் காரணமானவர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் பிறிதோர் துறையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பீற்றர் பேர்சிவல் ஏ.ஈ. தம்பர், பி.ரி. காஸ், நா.க. சண்முகநாதபிள்ளை என நீண்டு வந்த அதிபர் பரம்பரை அமரர் க. இராஜதுரை எனும் ஆளுமையின் சிகரத்தைப் பெற்றுக் கொண்டது. இவ்அதிபரின் நியமனம் மத்திய கல்லூரியின் தவமாகும். தற்போது அதிபராகப் பொறுப்பேற்றுள்ள எஸ்.கே. எழில் வேந்தனும் இவ்அதிபர் பரம்பரையின் தற்காலப் பிரகாசிப்பு ஆவார்.

" அமரர் இராஜதுரை அதிபராக வந்திலரேல்

ஆடு களமெங்கே அனைத்து விளையாட்டு மெங்கே



கணனிகளொடு கல்வி அறிவு எங்கே

காசினியிற் கல்லூரிக்கு கவினுறு புகழ் தானெங்கே"

எனக் கவிதை வினாத்தொடுக்க தோன்றுகின்றது.

யார் இந்த இராஜதுரை?


இன்று பலருக்கு இவரைத் தெரியாதிருக் கலாம் ஆனால்,

" உடல் வீரசிங்கம் மண்டபத்திற்கு உயிர் மத்திய கல்லூரிக்கு" எனத் தன்னுயிரைத் துச்சமனெ மதித்து நெருக்கடியான கால கட்டத்தில் நிமிர்ந்து நின்று பணியாற்றி அதற்காகத் துப்பாக்கிக் குண்டுகளைப் பரிசாக ஏற்று விண்ணகம் சேர்ந்த வீரன் தான் இவர். சாதாரண கிராமத்திற் பிறந்து சாபங்களை வரமாக ஏற்று சகல துறைகளிலும் பிரகாசித்து பல பாடசாலைகளிலும் அதிபராக இருந்து 1996.11.04 இல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு கல்வி உயர் கல்வி அமைச்சினால் அதிபராக நியமிக்கப்பட்டு வந்து அரசோச்சியவர்தான் அமரர் இராஜதுரை.

அவர் பொறுப்பேற்ற காலம் எத்தகையது "கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக" இருந்தால் மட்டும்தான் உயிர் வாழ முடியும். மறுபுறத்தில் மத்திய கல்லூரி போரின் கொடிய வடுக்களைச் சுமந்து ஆறாத வடுக்களுடன் அடி சாய்ந்து கிடந்தது. கோட்டையருகே யிருந்ததால் இதற்கு இந்த நிலை.

கட்டடங்களுக்குத்தான் இந்த நிலையென்றால் மாணவர் பரம்பரைக்கு மாபெரும் துயர். ஒரு காலத்தில் அதிகப்படியான டாக்டர்கள், பொறியியலாளர்களை உருவாக்கிய பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை மூன்று இலக்கத்திற்கு உட்பட்டிருந்தாலும் இவ்வாறு இருள் ஆழ்ந்த மத்தியின் காலத்திற்கு "விடிவுகாலம்" அமரர் இராஜதுரையென்ற இயேசுபிரான் போன்ற உத்தமரால் வந்தது.

இப்படிப் பணி செய்தால் இப்படி நடக்கும் என அவர் நன்று தெரிந்திருந்தார். " அஞ்சா நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம்" எனும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் பாடலை அடிக்கடி பாடியிருந்தார்.



பாடசாலைக் கட்டடங்கள் யாவும் பல இலட்சம் ரூபா செலவிற் சொந்தப் பணமாக 2 1/2 இலட்சம் செலவு செய்து அழகிய பூங்காவை அமைத்தார் என ஓய்வுபெற்ற பிரதியதிபர் கு. சிவகுமாரன் பதிவு செய்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், ஒரு காலத்தில் இராணுவ, பொலிஸ் வாகனத் தரிப்பிடமாக இருந்த விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்து மாணவர்கள் தினமும் துடுப்பாட்டமும் உதைபந்தாட்டமும் புரியும் மைதானமாக மாற்றியவர் அமரர் எனக் குறிப்பிட்டிருந்தார். சென். ஜோன்ஸ் அதிபர் எஸ். தனபாலனும் அமரர் க. இராஜதுரையும் ஒன்று சேர்ந்து பெருந் துடுப்பாட்டத்தைப் பெருந்திருவிழாவாக மாற்றியமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

யாழ். மாவட்டத்தில் பலரும் கணனியறிவை பெற்றிராத காலம் அக்காலம். ஒரு புறத்தில் மத்தியின் மைந்தர் IIS இயக்குநர் தனியார் கணனி கல்வியை வழங்கிக் கொண்டிருந்தார். மறுபுறத்தில் அமரர் இராஜதுரை '' மகேஸ்வரி கணனி வள நிலையம்'' அமைத்து ஏழைகளுக்கும் கணனியறிவை ஊட்டிக் கொண்டிருந்தார். இன்று கணனித் துறையிற் பிரகாசிக்கும் பலர் இப்பணியினால் உயர்வு பெற்றோரேயாவார்.

அமைச்சு ஊடாக நிதியைப் பெற்று மட்டும் இப்புனரமைப்பைச் செய்யவில்லை. கல்விக் காருண்யன் இ.ச.பேரம்பலம் போன்றே தனிநபர்களின் அனுசரணையையும் (சிறு அளவிலாவது) தேவைக்கேற்ப பெற்று கீழ் நிலையிலிருந்த கல்லூரியை மறுபடியும் மேலே கொண்டு வந்தார். மாணவர் எண்ணிக்கையை 4 இலக்கங்களுக்கு மேல் மாற்றினார்.

மாணவர்களின் கல்விப் பேறு உயர்வடைந்தது. தேசிய, மாவட்ட முதலிடங்களும் கிடைக்கத் தொடங்கின. இவர் அமரத்துவம் அடைந்த விஜயதசமி தினத்தன்று இறுதியாக பார்வையிட்டுச் சென்ற தரம் 5 இன் புலமைப்பரிசில் பெறுபேறு 20 ஆக உயர்ந்திருந்தது. இன்றைய எம்பகுதி பிரபலங்களான சக்தி தொலைக்காட்சி க.மயூரன், சம்பத் வங்கி உதவி முகாமையாளர் சுரேஷ், பேச்சாளர் ஜங்கரன், ரீ.தயாபரன், பீப்பிள் லீசிங்கொம்பனி க.கமலாகரன், காண்டீபன் போன்ற இளைய தலைமுறையினர் எல்லாம் இவரது அறுவடைகளே இதற்கு சான்றுகளாகும்.

எனினும் காலன் இவரையே அறுவடை செய்துவிட்டான். ஒழுக்கத்துடன் கல்வியையும் விளையாட்டையும் ஒரு படியுயர்த்திய பெருமகன் உதாரண புருஷராகி விட்டார்.

**நாக.தமிழிந்திரன்**
ஆசிரியர்,
யாழ்.மத்திய கல்லூரி

# லண்டனில் வாழும் தமிழர் வீட்டில் 200 பவுண் நகை கொள்ளை

## பட்டப்பகலில் சம்பவம்

பிரித்தானியா, போலிங்கடன் பகுதியில் ஈழத் தமிழர் வீடொன்றில் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த இருநூறு பவுண் நகைகள், பதினெட்டாயிரம் பவுண்டுகள் பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது. ஆறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்ட இந்த பணத்தினையே குறித்த திருடர்கள் மோப்பம் பிடித்துகொள்ளையடித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து உட்புகுந்த திருடர்கள் இந்த பட்டப்பகல் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இந்தியா செல்லும் முகமாக அவர்களின் உறவினர்களால் குறித்த வீட்டில் பாதுகாப்புக்கு வைக்கப்பட்ட நகைகள் என்பனவும் சேர்ந்தே கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வர்த்தகராக விளங்கும் இவர்களது வீட்டில் நட்பு ரீதியாக உறவாடிய நபர்கள் சிலர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த நபர்கள் சந்தேகமடைந்த நபர் ஒருவரை பொலிஸாருக்கு அடையாளப்படுத்திய நிலையில் கிட்டத்தட்ட திருடனை அவர்கள் நெருங்கி விட்டதாக அவர்களுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த திருடர்கள் கைது செய்யப்பட்டால் பலரது கொள்ளைகள் அம்பலத்துக்கு வரும் என் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒட்டுமொத்த இன்றைய நகைகளின் பெறுமதி எழுபதாயிரம் பவுண்டுகள் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த திருட்டின் பின்புலத்தில் தமிழர்கள் ஈடுபட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்திருட்டுத் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் துறையினர் தமது நகர்வுகளை தீவிரமாக்கியுள்ளனர். (அ-2)

# வவுனியாவின் பல பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை

(பூந்தோட்டம்)

வவுனியாவின் பல பகுதிகளிலும் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை செய்யும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

வவுனியா நகரசபை உறுப்பினர் லலித் ஜெயசேகரவின் ஏற்பாட்டில் சுனாமி அனிமல் பீப்பிள் அலயன்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்செயற்பாட்டில் வவுனியா மாவட்டத்தில் பல நாய்களுக்கும் பூனைகளுக்கும் கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா நகரசபையின் உறுப்பினர் லலித் ஜெயசேகர கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் நாய்களின் தொகை அதிகரித்து வருகின்றது. கடும் வெப்பமான நிலையில் அவற்றுக்கு நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அண்மையில் வவுனியா நகரில் ஒரு தெருநாய் 35 பேருக்கு கடித்திருந்தது. அதனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அது விசர்நாய் என கண்டறியப்பட்டிருந்தது.

எனவே, இவ்வாறான நிலையை கட்டுப்படுத்த தூர நோக்குடன் செயற்பட வேண்டியுள்ளது. அதன் காரணமாகவே இவ்வாறான ஒழுங்கினை வவுனியா மாவட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தேன். எனினும் மக்கள் மத்தியில் இதற்கான தெளிவின்மை காணப்பட்டு வருகின்றது என தெரிவித்தார்.

இவ்வாறு நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளும் வைத்தியர் டமித மாபிட்டியா தெரிவிக்கையில்,

இவ்வாறான கருத்தடை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு தனியாரிடம் சென்றால் சுமார் 2ஆயிரம் ரூபாவரை செலவாகும் எனினும் எமது அமைப்பானது முற்றிலும் இலவசமாக செயற்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் வவுனியாவில் 209 நாய்களுக்கும் இம்மாதம் கடந்த 10 ஆம் திகதி வரை 53 நாய்களுக்கும் சத்திரசிகிச்சையை மேற்கொண்டுள்ளோம். எனினும் வவுனியாவில் இம்மாதம் 150 நாய்களுக்கு கருத்தடை செய்வதற்கு உத்தேசித்துள்ளோம் என தெரிவித்தார். (அ-9-266)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



சிறுப்பிட்டி வடக்கை சேர்ந்த மகேந்திரன் கஜேந்திரன் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் பழைய மாணவன். இவர் தற்போது இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய அலுவலகத்தின் [illegible] கடமையாற்றி வருகின்றார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## சிங்கமாக நினைத்த ஓநாய்

காட்டில் சிங்கம் ஒன்று மலைக்குகையில் வாழ்ந்து வந்தது. நாள்தோறும் அது குகையை விட்டு வெளியே வரும். மலை உச்சியில் நின்று நாலாபக்கமும் பார்க்கும்.

காட்டில் உள்ள எல்லா விலங்குகளும் அதன் கண்ணில்படும்.

எந்த விலங்கை வேட்டையாடுவது என்று முடிவு செய்யும். கர்ச்சனை செய்தபடி பாய்ந்து அந்த விலங்கைக் கொல்லும்.

வழக்கம்போல அது மலை உச்சியில் நின்று பார்த்தது. யானை ஒன்றின் மீது பாய்ந்து அதைக்கொன்று தின்றது.

வேட்டை முடிந்து மகிழ்ச்சியாகத் திரும்பிக் கொண்டிருந்தது. அதன் எதிரில் ஓநாய் ஒன்று வந்தது.

சிங்கத்தை வணங்கிய அது. அரசே! உங்கள் வேலையாளாக என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். என்ன வேலை சொன்னாலும் பொறுப்புடன் செய்கிறேன் என்று பணிவுடன் வேண்டியது.

மகிழ்ச்சியாக இருந்த சிங்கம் ஓநாயின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது.

ஓநாயே! நீ என் வேலையாளாக இரு. நான் சொல்லும் வேலைகளைச் செய்து வா. எனக்குக் கிடைக்கும் உணவில் உனக்கும் ஒரு பங்கு தருகிறேன் என்றது சிங்கம்.

தன்னுடன் ஓநாயைக் குகைக்கு அழைத்துச் சென்றது.

ஓநாயே! இங்கே உன் வேலை இதுதான். நீ நாள்தோறும் மலை உச்சிக்குச் செல். அங்கிருந்து நாலாபக்கமும் 'பார்.

காட்டில் உள்ள எல்லா விலங்குகளும் உன் கண்ணில் படும். நான் வேட்டையாட வேண்டிய விலங்கு எது என்று தேர்ந்தெடு.


குகைக்கு வந்து என்னைப் பணிவாக வணங்கு.

அரசே! உங்கள் வலிமை பெருகட்டும் என்று மூன்று முறை சொல். பின்பு வேட்டையாட வேண்டிய விலங்கு உள்ளது என்று சொல். நான் அந்த விலங்கைக் கொல்கிறேன் என்றது சிங்கம்.

அதன்படியே நாள்தோறும் மலை உச்சிக்குச் சென்றது ஓநாய். கொழுத்த விலங்கு ஒன்றைத் தேர்ந்தெடுத்தது.

குகைக்கு வந்த அது சிங்கத்தை வணங்கியது.

அரசே! உங்கள் வலிமை பெருகட்டும் என்று மூன்று



முறை சொன்னது.

வேட்டையாடவேண்டிய விலங்கு எங்கேயுள்ளது என்றும் சொன்னது.

சிங்கம் பாய்ந்து சென்று அந்த விலங்கைக் கொன்றது. ஓநாய்க்கும் இறைச்சியில் பங்கு தந்தது.

இப்படியே தொடர்ந்து நடந்துவந்தது.

இறைச்சியை நிறையத் தின்றதால் ஓநாய் நன்கு கொழுத்தது. அதற்கு விந்தையான எண்ணம் ஒன்று தோன்றியது.

மூன்றுமுறை சொல்லும் மந்திரத்தால்தான் சிங்கம் பேராற்றல் பெறுகிறது. அதனால்தான் எந்த விலங்கையும் கொல்கிறது. சிங்கத்தைப் போலத்தானும் வேட்டையாட வேண்டும் என்று நினைத்தது.

அதற்கு என்ன செய்வது என்று சிந்தித்தது.

சிங்கத்தைப் பணிவாக வணங்கிய அது அரசே நீண்ட காலமாக உங்களுக்கு உண்மையாக உழைத்து வருகிறேன்.

எனக்கு ஒரேயொரு ஆசை. அது உங்களுக்குத் தவறாகத் தோன்றக்கூடும். இருந்தாலும் எனக்காக அந்த ஆசையை நீங்கள் நிறைவேற்றவேண்டும் என்றது.

உன் ஆசை எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேள். உடனே நிறைவேற்றி வைக்கிறேன் என்றது சிங்கம்.

அரசே! ஒரேயொரு நாள் நான் குகையில் உங்கள் இடத்தில் இருக்கிறேன். எனக்குப் பதில் நீங்கள் மலை உச்சிக்குச் செல்லுங்கள்.

கொழுத்த யானை ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். குகைக்கு வந்து என்னை வணங்குங்கள்.

அரசே உங்கள் வலிமை பெருகட்டும் என்று மூன்று முறை சொல்லுங்கள். நான் பாய்ந்து சென்று அந்த யானையைக் கொல்கிறேன்.

அதன்பின்பு நான் வழக்கம் போல உங்கள் வேலையாளாகி விடுகிறேன். நீங்கள் ஏவும் வேலைகளைச் செய்கிறேன். என் ஆசையை நிறைவேற்றுங்கள் என்றது. இதைக்கேட்ட சிங்கம் சிரித்தது.

ஓநாயே! நீ சிங்கம் அல்ல. சிங்கத்தால் மட்டுமே யானையைக் கொல்லமுடியும். இந்த முயற்சியை விட்டுவிடு என்றது.

அரசே! என் ஒரே ஆசை இது. உங்களுக்கு உண்மையாக உழைத்தவன் நான்.

என் ஆசையை நிறைவேற்ற மாட்டீர்களா? என்று கெஞ்சியது ஓநாய்.

வேறு வழியில்லாத சிங்கம் சரி! உன் விருப்பப்படியே நடக்கிறேன் என்றது.

மலை உச்சிக்குச் சென்றது அது. நாலாபக்கமும் பார்த்தது.

அங்கிருந்த விலங்குகளில் கொழுத்தயான்ன ஒன்றைத் தேர்ந்தெடுத்தது.

குகைக்கு வந்த அது ஓநாயை வணங்கியது.

அரசே உங்கள் வலிமை பெருகட்டும் என்று மூன்று முறை சொன்னது. யானை இருக்கும் இடத்தையும் தெரிவித்தது.

அங்கிருந்து வேகமாகச் சென்றது ஓநாய்.

யானையைப் பார்த்த அது கத்தியபடியே யானையின் மீது பாய்ந்தது.

ஓநாய் தன்னைத் தாக்குகிறதே என்று கோபம் கொண்டது யானை.

தன் துதிக்கையால் ஓநாயைப் பிடித்தது. தப்பிக்க வழியில்லாத ஓநாய் துடித்தது.

அப்படியே ஓநாயைத் தரையில் ஓங்கி அடித்தது யானை.

மண்டை உடைந்து அங்கேயே இறந்தது ஓநாய்.

கோபம் அடங்காத யானை தன் கால்களால் அதை மிதித்தது. ஓநாயின் உடல் நசுங்கிக் கூழானது.

ஓநாயைத் தேடிச்சிங்கம் அங்கு வந்தது. ஓநாயின் உடல் கூழாகிக் கிடப்பதைப் பார்த்தது.

இந்த ஓநாய் என் பேச்சைக் கேட்கவில்லையே. தன்னைச் சிங்கமாக நினைத்ததே. ஓநாயால் எப்பொழுதும் சிங்கமாக முடியாதே.

அதை இது அறியவில்லையே. வீணாக உயிரை விட்டதே என்று வருந்தியபடியே அங்கிருந்து சென்றது சிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணியில் இந்தியா ஈடுபடுவதன் மர்மம் தான் என்ன?

## அலசுகிறது தினமணி செய்தித்தாள்

(சென்னை)

இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் போது வசிப்பிடங்களை விட்டு மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கே மீள்குடியேற்றம் செய்வது இலங்கைத் தமிழர் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அந்த மக்களுக்கு வீடுகள் கட்டித் தருவது, வாழ்வாதாரத் திட்டங்களை உருவாக்குவது போன்றவற்றில் இலங்கைக்கு உதவ இந்தியா முன்வந்தது. இதேபோல் அமெரிக்கா, ஜப்பான் , சீனா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன.

ஆனால் இத்திட்டங்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த அளவுக்குப் பயனளிக்கின்றன என்பதை அறிய போரினால் பாதிக்கப்பட்ட முக்கிய பகுதிகளில் தினமணி செய்தியாளர் ஆய்வு ஒன்றினை நடத்தியுள்ளார். அதன் விபரங்கள் வருமாறு,

இலங்கையில் போரின்போது கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு போரில் இப்பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் உயிரிழந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் 2007 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்தின் முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அங்கு ஜனநாயக முறைப்படி மக்களுக்கு வாழ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது.

யுத்தத்திற்கு பின்னர் வவுனியா முகாமில் உள்ளவர்களை அவர்களின் பூர்வீகப் பகுதிகளுக்கு 180 நாட்களில் மீள் குடியேற்றம் செய்வோம் என இலங்கை அரசு 2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் அறிவித்தது. ஆனால் 2010, 2011 ஆம் ஆண்டுகளிலும் இந்தப் பணி நீடித்தது. இறுதியாக முகாமில் இருந்த மக்கள் பூர்வீக பகுதிகளுக்குப் பதில் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படுவதால் வேறு இடங்களில் அவர்கள் குடியமர்த்தப்பட்டதாக இலங்கை அரசு விளக்கம் அளித்தது.

மூன்று இலட்சம் பேர் அடைக்கப்பட்டிருந்த முள்வேலி முகாமில் கடந்த ஜூலையில் 7 ஆயிரத்து 500 பேர் மட்டுமே இருந்தனர். இந்த ஆண்டு செப்டெம்பரில் அவர்களும் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டு விட்டதாகவும் மெனிக்பாம் கடந்த 30 ஆம் திகதி மூடப்பட்டதாகவும் இலங்கை அரசு அறிவித்தது.

இந்தப் பின்னணியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் நிலைமையை ஆராய்ந்தால் குழப்பமும் அதிர்ச்சியும் மட்டுமே மிஞ்சின. யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் குடியேற்றம் செய்யப்படுவதாகக் கூறப்பட்டாலும் அவர்கள் அப்பகுதியில் புதிய தொழிலில் ஈடுபடுவதையும் வாடகைக்கு வீடு எடுத்து தங்குவதையும் பார்க்க முடிகிறது. அவர்கள் தமிழர் பகுதிக்கு வருவதற்குத் தமிழர்களிடமிருந்து பெரிய அளவில் எதிர்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக முள்ளிவாய்க்கால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படை கட்டுப்பாட்டில் காங்கேசன் துறை விடுதலைப் புலிகளுடனான போரின் போது மிகுந்த பாதிப்புக்கு உள்ளானது காங்கேசன்துறை துறைமுகம். இங்கு வர்த்தகப் படகுப் போக்குவரத்து இன்னும் தொடங்கப் படவில்லை.

போரின் போது மூழ்கடிக்கப்பட்ட சுமார் 10 கப்பல்கள் இங்குள்ள கடல் பகுதியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டுள்ளன. அங்கு அகழ்வுப் பணிகள் முடிந்த பின்னர் பெரிய கப்பல்கள் துறைமுகத்துக்கு வர வழியமைக்கப்படும் என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கிய முல்லைத்தீவில் இன்றும் இராணுவ கெடுபிடி நீடிக்கிறது. அங்குள்ள புதுக்குடியிருப்பு, நந்திக்கடல் ஆகிய பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் மக்கள் வசிக்கின்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த ஹாரிசன், சர்வத்ரா ஆகிய கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கான நிதியுதவியை நோர்வே நிறுத்திக் கொண்டது.

இப்போது இந்திய அரசு இவ்விரு அமைப்புக்களுக்கும் நிதி அளித்து வருகின்றது. இந்த நிதி எந்த அடிப்படையில் வழங்கப் படுகின்றது என்ற கேள்விக்கு ஹாரிசன், சர்வத்ரா அமைப்புக்களின் நிர்வாகிகளிடம் இருந்து சரியான பதில் இல்லை.

இவற்றின் செயற்பாட்டில் இந்திய இராணுவ உளவுப் பிரிவுக்கும் தொடர்பு இருக்குமா என்ற சந்தேகம் பல தரப்புகளாலும் எழுப்பப்படுகின்றது.

இலங்கையில் இந்த இரு அமைப் புக்களைத் தவிர வெளிநாடுகளைச் சேர்ந்த டேனிஷ் குழு, ஹலோ டிரஸ்ட், கண்ணிவெடி அகற்றல் ஆலோசனைக் குழு, சுவிஸ் அறக் கட்டளை ஆகிய அமைப்புக்களும் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில் ஏராளமான பகுதிகள் கண்ணிவெடி அகற்றப்படாத இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் கிளிநொச்சியில் உள்ள முகமாலை, யாழ்ப்பாணம் மாவட்ட மருதங்கேணி வட்டத்தில் உள்ள நாகர்கோவில், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு, கொக்குத்தொடுவாய், மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை மேற்கு ஆகிய பகுதிகள் அடங்கும்.

இந்தப் பகுதியில் சுமார் 118 சதுர கிலோ மீற்றர் தூரத்துக்கு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இலங்கையில் கப்பல், ரயில், வீட்டு வசதி, தொழில், வர்த்தக திட்டங்களை இந்தியா மேற்கொள்வது போல் சீன அரசு வீதி வசதி, துறைமுகக் கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

இலங்கை முழுவதும் வீதி அமைக்கும் பணி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைக்கும் பணி, விமான நிலையம் அமைக்கும் திட்டங்களை சீன அரசு மேற்கொண்டுள்ளது. அங்கு ஏற்கனவே ஆயிரக்கணக்கில் சீனக் கடற்படை வீரர்கள் பணியாற்றுகின்றனர்.

இலங்கையில் தொலைத்தொடர்புத் திட்டங்களையும் செயற்படுத்தும் சீன அரசின் விருப்பத்துக்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இவை எதிர்காலத்தில் இந்தியாவுக்கு கவலை தரும் பிரச்சினைகளாக எதிரொலிக்கும் என்ற அச்சமும் நிலவுகின்றது.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட ,போருக்குப் பிந்திய படிப்பினை மற்றும் நல்லிணக்கக் குழு அளித்த பரிந்துரையை முழுமையாக நிறைவேற்றுவதில் சில நடைமுறைசிக்கல்கள் உள்ளன. சிலவற்றை அதிகார மட்டத்தில் நிறைவேற்றலாம். ஆனால் பல பரிந்துரைகளைச் செயற்படுத்த நாடாளுமன்ற ஒப்புதலைப் பெற வேண்டும் என்றுள்ளது. (அ-2)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவு தபாலக சமூகத்தினரால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# வாய்க்கால் அமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதியில் பாதுகாப்பற்ற முறையில் வீதியின் மருங்கில் நீரோடும் வாய்க்கால் அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வாய்க்கால் சீமெந்துக் கலவையினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த சீமெந்துக் கலவையின் நடுவே இரும்புக் கம்பிகள் இடப்படுவது வழமை. இதன்படி ஆடியபாதம் வீதியின் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்பாக மருங்கில் வாய்க்கால் அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

இந்த வாய்க்கால் அமைக்கும் பணியானது பயணிகளுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் வகையில் எந்தவித பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதவாறு இடம்பெற்று வருகின்றது. (அ-6)

# யாழ். கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம் தரம் 1 ஏபி பாடசாலையினதும் அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-I ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 , 2-I ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவை தரம் 1 , 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் யாழ்ப்பாண வலயத்தினைச் சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-IIஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் த. கிருபாகரன் கேட்டுள்ளார். (அ)

# வாகன விபத்தில் சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

பொத்துவில் செங்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது. தமது சகோதரியுடன் குறித்து 6 வயதுடைய சிறுமி பாதையில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் லொறியொன்று மோதியதில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்துடன் தொடர்புடைய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சல் அனுப்பும் போது கவனிக்க வேண்டியவை

இன்றைய நவீன உலகில் பெரும்பாலானோர் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னஞ்சல் கணக்கை வைத்துள்ளனர்.

இதனால் பிறருக்கு அனுப்புகிற மின்னஞ்சல் கடிதங்களில் நீங்கள் பின்பற்ற வேண்டிய நல்வழிகள் நிறைய உள்ளன.

1. முதலில் மின்னஞ்சலை பொறுத்தவரை அவற்றை அனுப்பி விட்டால் மீண்டும் பெறமுடியாது என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே அனுப்பும் முன் அதனைக் கவனித்த பின்னரே அனுப்ப வேண்டும்.

பொதுவாக மின்னஞ்சலில் எழுத்துப் பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் யாரும் பொருட்படுத்துவதில்லை. மிக நெருக்கமான நபர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பும் போது பிழைகளுடன் அனுப்பினால் தவறில்லை. ஆனால் முன்பின் தெரியாதவர்களுக்கு மின்னஞ்சல்களை அனுப்பும் பொழுது எந்தப் பிழைகளுமின்றி அனுப்புங்கள்.

இதற்காகவே Word Spell Checker போன்ற Program கள் உள்ளன. எனவே அவற்றை நம் எழுத்துப் பிழைகளை திருத்தி அனுப்ப பயன்படுத்தலாம்.

2. மின்னஞ்சல் யாருக்கு போய் சேர வேண்டுமோ அவருக்கு மட்டும் பதிலை அனுப்பி வையுங்கள். தேவையில்லாமல் Reply All பட்டனை அழுத்தி உங்கள் பதிலை எல்லோருக்கும் அனுப்பி வைக்காதீர்கள்.

குறிப்பாக News Group , Mailing List போன்றவற்றில் Reply All பட்டனைப் பயன்படுத்தாதீர்கள். மின்னஞ்சல் சேவையில் மட்டும் மிக மிக தேவைப்பட்டால் மட்டுமே Reply All பட்டனை அழுத்துங்கள்.

3. நேரில் ஒருவரிடம் பேசும் பொழுது உங்கள் முக பாவனை பேச்சின் ஏற்ற இறக்கம், அங்க அசைவுகளை வைத்து நீங்கள் கோபத்திலா அல்லது கேலியாகவா அல்லது மகிழ்ச்சியுடனா பேசுகிறீர்கள் என்பதை எடை போட முடியும்.


ஆனால் மின்னஞ்சல் என்பது வெறும் Text ஐ அடிப்படையாகக் கொண்டது. எனவே நீங்கள் சாதாரணமாக அனுப்புகிற மின்னஞ்சலை ஒருவர் தவறுதலாக புரிந்து கொள்ள முடியும். இதைத் தவிர்க்க Smileys எனப்படுகிற அடையாளங்களை மின்னஞ்சலில் சேர்க்க வேண்டும்.

4. இரகசிய மின்னஞ்சல்கள், தனிப்பட்ட விடயங்களை கொண்ட மின்னஞ்சல்கள் போன்றவற்றை அனுப்பும் போது பெறுநருடைய முகவரியைச் சரி பாருங்கள்.

5. ஒரே மின்னஞ்சலை உங்கள் நண்பர்கள் எல்லோருக்கும் அனுப்புகிறீர்கள் என வைத்துக் கொள்ளுவோம். உங்களுடைய நண்பர் ஒருவருக்கு உங்களுடைய மற்றொரு நண்பர் நண்பராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

எனவே அவர் ஏனையவருடைய மின்னஞ்சல் முகவரியை தெரிந்து கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. ஆகவே நீங்கள் BCC யை பயன்படுத்தி அதில் எல்லோருடைய முகவரிகளையும் தெரிவிக்க வேண்டும்.

# ரோபோ தொழில்நுட்பத்தில் கார்கள் வடிவமைப்பு




ஜப்பானின் பிரபல கார் உற்பத்தி நிறுவனமான நிஷான் சுயமாகவே parking செய்யக்கூடிய வகையில் ரோபோ தொழில்நுட்பத்தைக் கொண்ட கார்களை வடிவமைத்துள்ளது.

NSC-2015 பிரபல என்ற பெயருடன் தயாரிக்கப்பட்ட இக்கார்கள் அதிகளவு போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களிலும் காரை முன்னோக்கி செலுத்தக்கூடியதாகக் காணப்படுவதுடன் பொருத்தமான இடத்தினை தெரிவு செய்து parking செய்யும் ஆற்றலையும் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கார்கள் Smart phone னின் உதவியுடன் அதன் சாரதி இருக்கும் இடத்தினை கண்டுபிடித்து வரக்கூடியதாகவும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

# சிறந்த ஸ்மார்ட் போனாக கெலக்ஸி S3 தெரிவு



சாம்சுங் நிறுவனத்தின் கெலக்ஸி S3 ஆனது இவ் வருடத்தின் சிறந்த ஸ்மார்ட் போனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. லண்டனில் நடைபெற்ற 12 ஆவது வருடாந்த மொபைல் சொய்ஸ் விருது வழங்கும் விழாவிலேயே கெலக்ஸி S3 இவ்விருதினைப் பெற்றுள்ளது.

மேலும் இவ்விருது வழங்கும் விழாவில் சாம்சுங் மொத்தம் 4 விருதுகளைப் பெற்றுக் கொண்டது.

கெலக்ஸி S3 ஆனது best media phone மற்றும் phone of the year ஆகிய இரு விருதுகளையும் கெலக்ஸி நோட் most innovative device விருதினையும் சாம்சுங் manufacturer of the year என்ற விருதினையும் பெற்றுக் கொண்டது.

இவ்விழாவில் எச்.ரி.சி நிறுவனத்தின் HTC One X ஸ்மார்ட் போனானது இரண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டது. இது best video phone மற்றும் best social net working phone ஆகிய விருதுகளை வென்றது. நொக்கியாவின் Preview 808 Best Camera Phone விருதினைப் பெற்றுக் கொண்டது. இது 41 மெகா பிக்ஸல் கமராவினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நொக்கியாவின் Nokia 800 ஆனது Best Smart Phone Design விருதினை வென்றது.

சொனியின் Xperia u Best Value Phone விருதினையும் அப்பிளின் புதிய ஐபேட் Tablet Of The Year விருதினை வெற்றி கொண்டது.

இவ்வருடத்திற்கான விருதுகளில் சாம்சுங்கின் ஆதிக்கம் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சாம்சுங்கின் கெலக்ஸிS3ஆனது விற்பனையில் சாதனை பல படைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# Multimedia Projector புதிய Tablet களில்



மக்களின் மத்தியில் பிரபலமாகிகொண்டிருக்கும் Tablet களில் புதிய அம்சங்கள் அறிமுகமாகி கொண்டே இருக்கின்றன. இதன் அடிப்படையில் கூகுளின் Andro id இயங்குதளத்தில் செயற்படக்கூடிய Multime dia Projector களைக் கொண்ட புதிய Tablet கள் அறிமுகமாகின்றன.

SmartQU7 எனும் பெயருடன் அறிமுகமாகும். இவை 1024x600 pixels உடையதும் 7 அங்குல அளவுடையதுமான தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1 GHz வேகத்தில் செயற்படக்கூடிய OMAP 4430 processor களையும் கொண்டுள்ளன.

அத்துடன் இவற்றின் projector மூலம் 50 அங்குலங்கள் உருப்பெருக்கம் கொண்ட காட்சிகளை உருவாக்க முடியும்.8GB மற்றும் 16GB உள்ளக சேமிப்பு சாதனங்களைக் கொண்டதாகக் கிடைக்கும். இவற்றின் பெறுமதியானது முறையே 315 அமெரிக்க டொலர்கள், 400 அமெரிக்க டொலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தேவைக்கு ஏற்றவாறு சேமிப்பு அளவினை microSD கார்ட்கள் மூலம் அதிகரிக்கவும் முடியும்.




# Video Flick



Video Flick மென்பொருளானது வீடியோக்கள், புகைப்படங்கள் என்பனவற்றை Editing செய்வதற்கு உதவி புரிவதோடு அவற்றினை குடும்பத்தவர்களுடனும் நண்பர்களுடனும் ஒன்லைனில் பகிர்ந்து கொள்ளும் வசதியினைத்தருகின்றது.

இதன்மூலம் பல்வேறு Format களில் வீடியோக்களை மாற்றம் செய்யக்கூடியதாகக் காணப்படுவதுடன் வீடியோக்களிலிருந்து இலகுவாக Snapshot களினையும் பெறக்கூடிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் புகைப்படங்களைப் பயன்படுத்தி வாழ்த்து அட்டைகளையும் (Greeting Cards) தயாரிக்க முடிவதுடன் அவற்றை பிரபல்யமான இணையத்தளங்களில் பகிரும் வசதியையும் தருகின்றது. இவற்றுடன் வீடியோக்களுக்கான Title,Credit போன்றவற்றினையும் சேர்த்துக்கொள்ள முடியும்.

இம்மென்பொருளின் மூலம் வீடியோ கோப்பு ஒன்றினை ASF,AVI,MP3, AAC,MP2,AC3 ஆகிய Format டிற்கும் மாற்றம் செய்து கொள்ள முடியும். தேவையேற்படின் அவற்றினை CD மற்றும் D.VD களில் பதிவு செய்யும் வசதியையும் கொண்டுள்ளது.

# Google TV




இணையசேவையினை வழங்கும் பிரபலநிறுவனமான கூகுளினால் அறிமுகப்படுத்தப்பட்டு பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள Google TV சேவையினுள் தற்போது Google play Movies,TV Shows மற்றும் Music வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பயனர்களின் பயன்பாட்டிற்காக எதிர்வரும் வாரங்களில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இச்சேவைகளின் மூலம் ஒரே பகுதியிலிருந்து அனைத்து விதமான பாடல்கள், திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இலகுவாக பார்க்கலாம்.

மேலும் இச்சேவையினை வாடகை அடிப்படையிலோ அல்லது குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி சொந்தமாக கொள்வனவு செய்தோ பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி செய்யாவிடில் உயர்ந்த சாஸ்திரங்கள் கூட விசம். *~ சாணக்கியர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எங்கள் பெருமையை நிலைநிறுத்திய இரு பெரும் தூண்களை நிமிர்த்துவோம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையிலான மருத்துவத் துறை சார்ந்தோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

சுகாதாரத் திணைக்களமும் பாடசாலைகளும் இணைந்து சுகாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பான இக்கருத்தரங்கில் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் உரையாற்றுகையில், முக்கியமான விடயமொன்றைச் சுட்டிக் காட்டினார்.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணம் என்றால் அதற்கென ஒரு தனித்துவம் இருந்தது. அந்தத் தனித்துவம் ஏற்படுவதற்கு இரண்டு பெரும் தூண்கள் மூலகாரணமாகின.

அதில் ஒன்று கல்வி. மற்றையது ஆன்மிகம்.

இவ்விரு தூண்களின் தாங்குகைகளில் தான், யாழ்ப்பாணத்தின்தனித்துவம், அதன்பெருமை, அதற்கான மதிப்பு என்பன அத்தனையும் உயர்வு பெற்றிருந்தன.

ஆனால் இன்று .... என்று அவரின் உரை முற்றுப்பெறாத கேள்வியாகி நின்றது.

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் குறிப்பிட்ட கல்வி, ஆன்மிகம் என்ற இரு பெரும் தூண்கள் பற்றி தமிழ் மக்கள் நிச்சயம் சிந்திக்க வேண்டும்.

இன்று நாம் சந்திக்கின்ற எங்கள் இனம் சார்ந்த அத்தனை உள்ளகப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருப்பது கல்வியிலும் ஆன்மிகத்திலும் நாங்கள் அடைந்துள்ள வீழ்ச்சி என்பது நிறுத்திட்டமான உண்மை.

கல்வி இல்லாத ஆன்மிகம். ஆன்மிகம் இல்லாத கல்வி என்பதால் மனித இனம் ஒருபோதும் வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ முடியாது.

அதனால்தான் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த சுவாமி விவேகானந்தர், ஆன்மிக தானம் தேவை என்றார்.

தமிழினம் உயர்ந்து நின்ற பெருமையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமாயின் எங்களிடம் சரிந்துபோயுள்ள கல்வி, ஆன்மிகம் ஆகிய இருதூண்களும் தூக்கி நிறுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக கல்வி கற்கின்ற மாணவர்களிடையே ஆன்மிகமும் சிறப்புற்றிருக்க வேண்டும்.

ஆன்மிகத்தை ஒருபுறத்தில் ஒதுக்குகின்ற கல்வியால் சாதனை படைக்க முடியாது. மாறாக வேதனையைத்தான் அனுபவிக்க முடியும்.

ஒரு புறத்தில் ஆசிரியர்களையும், அதிபர்களையும் பாராட்டி வாழ்த்துகின்ற கலாசாரம். மறுபுறத்தில் வட மாகாணத்தின் கல்வி இலங்கையில் உள்ள அத்தனை மாகாணங்களிலும் இறுதி நிலை என்ற முடிபுகள்.

ஓ! எங்கோ தவறுண்டு.

முன்பெல்லாம் மாணவர்கள் ஆசிரியர்களை தங்கள் இதயங்களில் இருத்தி வழிபட்டார்கள்.

எங்களை ஆளாக்கிய தெய்வங்கள் என்று போற்றுதல் செய்தார்கள்.

ஆனால் இன்று மாணவர்– ஆசிரியர் உறவு எப்படி இருக்கிறது.?

இதைச் சரி செய்யாமல் பாராட்டி வாழ்த்துவதில் பயனேதும் உண்டா?

வைத்திய கலாநிதி கூறிய கல்வியும் ஆன்மிகமும் பற்றிச் சிந்திப்போம்.

அவற்றை மீண்டும் தூக்கி நிறுத்துவோம்.

அதுவே நாம் உய்யும் வழி என்று உணர்வோம்.

# டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்று திரளுங்கள்

## யாழ்.பிராந்திய சேவைப் பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணத்தில் டெங்குநோய் ஆரம்பத்தில் தென்னிலங்கையிலிருந்து வந்தவர்களாலேயே பரப்பப்பட்டதாக யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு சிரமதான ஏற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினர் குருநகர் பிரதேச வைத்தியசாலையில் நேற்றுக்காலை 9 மணியளவில் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 8ஆம் திகதியிலிருந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளோம்.

முதன்முறையாக டெங்கு நோய் ஓரிடத்தில் பரவும்போது அங்கு நோயின் தாக்கம் தீவிரமாகவே காணப்படும். கடந்த 2009 ஆம் ஆண்டு பிற்பகுதியில் யாழில் பரவத்தொடங்கிய டெங்கு நோயின் தாக்கம் 2010ஆம் ஆண்டு காலத்தில் தீவிரமாகவே காணப்பட்டது.

இவ்வாண்டில் மூவாயிரம் பேர் வரையில் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததோடு 26 பேர் வரையில் இறந்தும் உள்ளனர்.

இதன்பின்னர் அனைவரினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்புக்களினால் டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

இந்நோயின் ஆரம்பம் தென்பகுதியிலிருந்து யாழ்.வந்தவர்களினாலேயே யாழில் பரவத் தொடங்கி மழைக்குப் பின்னர் இங்கு டெங்கின் செறிவு அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் அதற்கு முன்னரான காலப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்தல் வேண்டும். அதனைநாம்செய்யத்தவறினால்நோயின் தாக்கத்தின் தீவிரத்தினை அனுபவிக்க நேரிடும்.

இந்நோயினை சுகாதார சபையினர் மட்டும் கட்டுப்படுத்த முடியாது.

பொதுமக்கள், திணைக்களங்கள், பொலிஸாரின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி அவசியமானதாகும்.

கடந்த காலங்களில் டெங்குநோய் ஒழிப்பில் யாழ்.மாவட்டமே முன்னிலையிலுள்ளது என்றார். மேலும் இந்நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை பணியாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ–4)

# ஆணையாளர் இடமாற்றத்திற்கு அரசியல் தலையீடு காரணமல்ல

யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் இடமாற்றம் செய்யப்பட்டது அரசியல் தலையீடு காரணமாக அல்ல.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சுத்தான் அவரை ஆணையாளராக நியமித்தது. பின்பு ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மீளவும் பெற்றுள்ளது. இதற்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

மாநகரசபைக்கு சிறந்தசேவையினை ஆணையாளர் செ.பிரணவநாதன் செய்துவந்தார். அவரை இடமாற்றம்செய்ய வேண்டியதேவை எமக்கில்லை. அத்தோடு இடமாற்றம் செய்யும் அதிகாரமும் எமக்கில்லை.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எம்மீது குற்றம் சாட்டுகின்றனர். அவ்வாறு வெளியான செய்திக்கு எமது கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்.

அரசாங்க அதிகாரிகள் இடமாற்றம் பெறுவது இயல்பானது. அத்தோடு தற்காலிகமாகவே மாநகரசபை ஆணையாளராக பிரணவநாதன் நியமிக்கப்பட்டிருந்தார் எனவும் அவர் தெரிவித்தார். (அ–6)

# குடும்பத் தகராறில் குடும்பஸ்தர் காயம்

குடும்பத் தகராறில் அயல்வீட்டுக்காரர் இரும்புக் கம்பியால் அடித்ததில் குடும்பஸ்தரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11 மணியளவில் இருபாலை வசந்தபுரம் பிளச் லேனில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தினைச் சேர்ந்தவரும் 4 பிள்ளைகளின் தந்தையுமான அப்புக்குட்டி யோகரட்ணம் (வயது 40) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

அயல்வீட்டுக்காரர் ஒருவருடன் ஏற்பட்ட முரண்பாட்டின்போது அயல் வீட்டுக்காரர் தனது உறவினர்கள் 4 பேருடன் சேர்ந்து தனது தந்தையை கம்பியொன்றினால் அடித்துக்காயப்படுத்தியதாக காயமடைந்த குடும்பஸ்தரின் மகன் தெரிவித்தார்.

காயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ–4)



## வெள்ளி நற்சிந்தனை

93

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

இறையருள் பற்றிப் பல அடியார்கள் பாடியுள்ளனர். அருள் பெற்ற தம்முடைய அனுபவத்தை அழகிய தமிழ்ச்சொற்களால் இயம்பியுள்ளனர். பல உவமைகளைக் கையாண்டு தெய்வீக அனுபவப்பேற்றை எல்லோரும் அறிய வைத்துள்ளனர். ***கல்லை மென் கனியாக்கும் விச்சையினால் இறைவன் தன்னை அன்புடையவனாக்கினான்*** என மணிவாசகர் கூறுகிறார். சிவபெருமான் உறுதியான மகா மேருமலையை மென்மையான கனி போல இளகச் செய்து வில்லாக வளைத்தவர். அதேபோல இளகாத கல் போன்ற தன் மனத்தையும் இளகச் செய்து இறைவன் திருவடி மீது எல்லையில்லாத அன்பு கொள்ளச் செய்த விந்தையை எண்ணிப்பார்க்கிறார்.


இறைவன் மறுவில் வானவன். மணம் பொருந்திய மயிர்ச்சாந்து பொருந்திய நல் கூந்தலையுடைய உமையம்மையை இடப்பாகத்திலே உடையவன். தன்மீது மெய்யன்பு கொள்ளாதவரையும் அன்பு கொள்ளச் செய்யும் ஆற்றல் படைத்தவன். மணிவாசகர் தன்னுடைய குணவியல்புகளைக் கொண்டே இவ்வாறு இறைவன் கருணையை வெளிப்படுத்திக் காட்டுகிறார். எல்லையில்லாத இறைவன் திருவருளை உணர்ந்து மணிவாசகர் பாடியுள்ள பாடல்கள் கேட்போரைப் பக்தி வயப்படுத்தும். திருவருளை உணரும் மனப்பக்குவம் எல்லோரிடமும் இல்லை. ஆனால் இறைவன் எல்லோரையும் பக்குவம் அடையச் செய்வான். இதனையே மணிவாசகர் ***அவனருளாலே அவன் தாள் வணங்கி*** எனக் குறிப்பிட்டுள்ளார். இதுவே இறைவனுடைய எல்லையில்லாத கருணையாகும். இறைவன் மீது கொள்ளும் அன்பு என்பது திருவடிமேல் நாம் வைக்கும் மெய்யன்பாகும். ***எல்லையில்லாத நின் கருணை*** என இறைவன் பெருங்கருணையை மணிவாசகர் நன்குணர்ந்தே பாடியுள்ளார். ஏனெனில் அவர் என்ன செய்தாலும் இறைவன் வலியவந்து ஆட்கொண்டான் அல்லவா.

தன்னுடைய குணவியல்பை மணிவாசகர் குறைபாடு என்று குறிப்பிட்டுள்ளார். மெய்யன்பு இல்லாத வலியேன். ஆனால் இக்குறைபாடுகளையெல்லாம் இறைவன் கருத்திற்கொள்வதில்லை. மனித நிலையில்தான் குறைபாடுகள் கணக்கில் எடுக்கப்படும். மணிவாசகர் மனதிலே உலகியல் வாழ்வின் நெறிகளே நிறைந்திருந்தமையால் இவ்வாறு எண்ணுகிறார். இறைவன் கருணைக்கு எந்தக் குறையும் தடையாகாது. அது பெருவெள்ளம்போல பாய்ந்து கொண்டிருப்பது. அடியவரை ஆட்கொள்ளக் காத்திருப்பது. அதனால் குறைவுடைய எனக்கு மீண்டும் நின் திருவடியைக் காட்டியருளி என்னை இப்பொய்யுலக வாழ்விலிருந்து மீட்டருளும் ஆற்றலுடையவனே என மணிவாசகர் மனம் கசிந்து வழிபடுகிறார். இறைவன் கருணையை அவர் முழுமையாக உணர்ந்தநிலை இதுவாகும். இறைவன் கருணை பற்றிய ஐயத்தோடு வாழும் மனிதரை மணிவாசகர் பாடல் தெளிவு பெறச் செய்யும். எமது இறுகிய நெஞ்சத்தை இளகச் செய்யும் இறைவன் திருக்கோலத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறார். வழிபாடு இடையறாது செய்யப்பட வேண்டும். முழுமையான நம்பிக்கையோடு செய்யப்பட வேண்டும். மணிவாசகர் பாடல் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

**இல்லை நின்கழற் கன்ப தென்கணே**
**ஏலம் ஏலுநற் குழலிபங்கனே**
**கல்லைமென்கனியாக்கும்விச்சைகொண்**
**டென்னை நின்கழற் கன்ப ணாக்கினாய்**
**எல்லையில்லை நின் கருணை எம்பிரான்**
**ஏதுகொண்டுநான் ஏது செய்யினும்**
**வல்லையே யெனக் கின்னும் உன்கழல்**
**காட்டி மீட்கவும் மறுவில் வானவனே**

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட மட்டப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற வுள்ளதாகப் போட்டி ஏற்ப்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை காற்பந்தாட்டச் சம்மேளனமும் விளையாட் டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய காற்பந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான பிரதேச மட்டப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மட்ட போட்டிகள் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.இதில் கரைச்சித பூநகரித பச் சிலைப்பள்ளித கண்டாவளை பிரதேச அணிகள் மோதவுள்ளன.

# இன்றைய போட்டி


(கரவெட்டி)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதி யுடன் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையா ட்டுக்கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்ட ரீதியிலான 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டிகள் வல் வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இதில் இன்றையதினம் நடைபெறவுள்ள முத லாவது போட்டியில் பி.ப. 3 மணிக்கு வதிரி பொம்மஸ் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணியும் இரண்டாவது போட்டியில் பி.ப.4 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (3-24)

# நியூஸ்ரார் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டி;
# சென்றலைட்ஸ், பரிஸ், சென்றல் வெற்றி





(யாழ்ப்பாணம்)

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறீமியர் லீக்கின் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டிகளில் பரிஸ்,சென்றலைட்ஸ், சென்றல் அணிகள் வெற்றிபெற்றுள்ளன. முதலாவது காலிறுதிப் போட்டியில் பரிஸ் அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிளமிங் 30, அன்புயன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோத் 2, கரிகரன் 2 விக்கெட்டைக் கைப்பற்றினர். 127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பரிஸ் அணி 17.3 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டால் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தனர்.

துடுப்பாட்டத்தில் துவாரகன் 23, வினோத் 19, கரிகரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விதுசன் 3, லவேந்திரா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பரிஸ் அணியின் கரி கரன் தெரிவானார். இரண்டாவது காலிறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் ஒல்கொட்ஸ் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜேம்ஸ் 49, எடின் 29, விதுசன் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரியலக்ஸன் 2, நிரோசன் 2, திலீபன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஒல்கொட்ஸ் அணி 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டு க்களையும் இழந்து 115 ஒட்டங்களைப் பெற்று 61 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் திலீபன் 31, ஸ்ரீகுகன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டநாயகனாக சென்ற லைட்ஸ் அணியின் ஜேம்ஸ் தெரிவானார். மூன்றாவது காலிறுதிப் போட்டியில் கிறாஸ்கோப்பர்ஸ் அணியும் சென்றல் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணி ரஜீவின் அதிரடியான சதத்துடன் இருபது ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரஜீவ் 103, கலிஸ்ரன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பார்த்தீபன் 2, ஜனந்தன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 190 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய கிறாஸ்கோப்பர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்தனர். கஜதீபன் 55, காந்தசீலன் 29, பார்த்தீபன் 22 ஓட்டங் களைப் பெற்றனர். பந்துவீச்சில் றொகான் 3 விக்கெட்டைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் ரஜீவ் தெரிவானார். (23)

# கொற்றாவத்தை சிவானந்தா வி.க.உதைபந்தாட்டம்;
# இளவாலை யங்கென்றிஸ் அணி சம்பியன்





(கரவெட்டி)

கொற்றாவத்தை சிவானந்தா வெற்றிக்கிண்ணத் துக்கான உதைபந்தாட்ட போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் வதிரி டயமன்ஸ் அணியை வெற்றிபெற்று இளவாலை யங்கென்றிஸ் அணி சம்பியனாகியது.

வடமராட்சி 521 ஆவது இராணுவ படைப் பிரிவினரும் கொற்றாவத்தை சிவானந்தா விளை யாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தின் பலம்வாய்ந்த இரு அணிகள் மோதின. ஆட்டம் ஆரம்பித்து இடை வேளை வரை இரு அணிகளும் ரசிகர்களுக்கு விரு ந்து அளிக்கும் வகையில் தமது திறமைகளை வெளி ப்படுத்தினர். பிற்பாதி ஆட்டத்தில் 12 ஆவது நிமி டத்தில் இளவாலை யங்கென்றிஸ் அணியின் முன் கள வீரர் ஞானரூபன் கோல் ஒன்றைப் போட்டு ஆட்டத்தின் வேகத்தை மேலும் அதிகரித்தார்.


இறுதியில் 1:0 என்ற கோல்கணக்கில் இளவாலை யங் கென்றிஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாகி யது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வதிரி பொம்மஸ் அணியை தோற்கடித்து 1:0 என்ற கோல்கணக்கில் கரவெட்டி கலட்டி ஐக்கிய அணி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை பெற்றது.

இத் தொடரில் ஒழுக்கமான அணியாக மணற்காடு சென். அன்ரனிஸ் அணியும் சிறந்த பின்கள வீரராக டயமன்ஸ் அணியின் உசானந் தனும் சிறந்த கோல்காப்பாளராக டயமன்ஸ் அணியின் மதனராஜ், வளர்ந்து வரும் வீரராக கென்றிஸ் அணியின் மகிபன், ஆட்ட நாயகனாக அதே அணியின் ஞானரூபன், தொடர் நாயகனாக அதே அணியின் சதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட் அணியின் தொடர் தோல்வி
# நெருக்கடியில் தோனி; பயிற்சியாளர் பிளட்சர்




2011 உலகக்கிண்ண தொடருக்கு பின் இந்திய கிரிக்கெட் அணி முக்கியமான பல தொடர்களில் படுதோல்விகளைச் சந்தித்து வருவதால் அணித் தலைவர் தோனி மற்றும் பயிற்சியாளர் பிளட்சருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. டெஸ்டில் நம்பர் வன் அந்தஸ்தை இழந்த நிலையில், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் நடந்த 8 டெஸ்ட் போட்டிகளில் உதைவாங்கியது.

அவுஸ்திரேலியாவில் நடந்த 3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறமுடியாமல்போனது.

மேலும் பங்களாதேஷில் நடந்த ஆசிய கிண்ணப் போட்டிகளிலும், இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் வெளியே தள்ளப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக தற்போது நடந்து முடிந்த இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் முக்கியமான ஆட்டத்தில் தென்னாபிரிக்காவிடம் கோட்டை விட்டது.

அணித் தலைவர் தோனியின் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டாலும், வீரர்கள் தெரிவிலும் பெரும் குழப்பங்கள் நடந்துவருவது ஏன் ? என்று தெரியவில்லை.

மற்றைய நாட்டு கிரிக்கெட் சபைகள் இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அணியை முன்னேறிச் செல்ல தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றன.

மேலும் பிளட்சரின் பதவிக் காலம் முடிய இன்னும் ஒருசில மாதங்கள்தான் உள்ளன.

அவருடைய செயற்பாடுகள் இப்படியே சென்றால், பதவிக் காலம் நீடிக்கப்படுவது சந்தேகம் தான்.

கிறிஸ்ரன் பயிற்சியாளராக இருந்தபோது இந்திய அணி தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்தது. அவர் தனக்கென்று எந்த பாணியையும் கையாளாமல் மூத்த வீரர்கள் உட்பட எல்லோரையும் அவர்களது போக்கிலேயே ஆட வைத்தார். அதை மேம்படுத்தவும் செய்தார்.

ஆனால் தற்போது பிளட்சர் தொழில்நுட்பங்களை மட்டும் நம்பி, அதையே பயன்படுத்துவதாக ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. இதைத் தவிர்த்து அணியின் மேம்பாட்டுக்கு எது தேவையோ, அதைச் செய்தால் மட்டுமே வெற்றிக்கு வழி வகுக்கும்.

இந்திய அணி அடுத்து சொந்த மண்ணில் இங்கிலாந்து, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா தொடர்களை எதிர்கொள்கிறது. இந்தத் தொடர்களில் இருந்தே இந்திய அணியை புதிதாக சீரமைக்க வேண்டும். இளம் வீரர்களை உருவாக்கி அணியை வலுப்படுத்தினால் மட்டுமே வெளிநாட்டுத் தொடர்களில் நம்பிக்கையுடன் ஆட முடியும்.

# றொனால்டினோவுக்கு போட்டித் தடை




கால்பந்தாட்ட போட்டியின் நட்சத்திர வீரர் றொனால்டினோவுக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் ஏ பிரிவு கால்பந்து போட்டித் தொடரில் அத்லெடிகோ அணிக்காக விளையாடிவரும் நட்சத்திர வீரர் றொனால்டினோவுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிரணி வீரரைக் காயப்படுத்தும் வகையில் அபாயகரமாக நடந்து கொண்டதாக அவர் மீது குற்றத் சாட்டப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வெடிக்காத பொருட்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும்
## மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் முற்றாக நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டாலும் வெடிக்காத வெடி பொருட்களின் தாக்கம் சுமார் 10 வருடங்களுக்கு மேலும் தொடரும் என வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மிதிவெடி செயற்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள வ.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணம் நீண்ட காலமாக யுத்தத்தை எதிர்கொண்ட மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணமாக உள்ளது.

தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மீள்குடியேற்றமும் இடம்பெற்று வருகின்றது.

மீள்குடியேற்றம் இடம்பெறும் பகுதிகள் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பிரதேசம் என மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசம்.

இருப்பினும் இந்தப் பிரதேசங்களில் வெடிக்காத வெடி பொருட்களும் இருக்கக்கூடும். வெடிக்காத வெடி பொருட்களை முற்றாக அகற்ற முடியாது. இதுதொடர்பில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

மேலும் வெடிக்காத வெடி பொருட்கள் தொடர்பில் தகவலறிந்தால் உடனடியாக எமக்கு அறிவித்தால் அனர்த்தம் ஏற்படாமல் பாதுகாக்க முடியும்.

நிலக்கண்ணி வெடிகள் எதிர்வரும் இரண்டு, மூன்று வருடங்களில் அகற்றப்பட்டாலும் வெடிக்காத வெடி பொருட்களினால் 10 வருடங்களுக்கும் மேலாக தாக்கம் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

அண்மையில் கூட யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் மோட்டார் ஆயுதம் ஒன்று மீட்கப்பட்டது.

இந்த ஆயுதம் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற போரின்போது பயன்படுத்தப்பட்டது.

எனவே மீள்குடியேற்றப்படும் மக்கள் வெடிக்காத வெடி பொருட்கள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருப்பதோடு அவைகளை கையாள்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்..

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலராக இருந்த வ.முருகதாஸ் தற்போது வடக்கு-கிழக்கு மாகாண செயற்பாட்டு அலுவலராக பதவியுயர்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# விக்கிரகம் திருட்டு

(யாழ்ப்பாணம்)


சண்டிலிப்பாய் வடக்கு அரசடி சித்தி விநாயகர் ஆலயத்தின் விக்கிரகம் ஒன்று காணாமல் போயுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இவ்விக்கிரகம் காணாமல் போயுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினமன்று ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு விக்கிரகம் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)

# மரண அறிவித்தல்
## வஸ்தியாம்பிள்ளை சிறில்



நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளியில் வசித்து வந்தவருமான வ.சிறில் நேற்று (11.10.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான மரியஸ்ரெலாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புக் கணவரும், அன்ரன் ஜெயராஜின் அன்புத் தந்தையும், கீதாஞ்சலியின் அன்பு மாமனாரும், கிறிஸ்ரிக்காவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான றேமன் வஸ்தியாம்பிள்ளை-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பீற்றர், பிலமினா (அனி), காலஞ்சென்ற கிறிஸ்ரோப்பர் மற்றும் ஹரியற், லில்லிறோஸ், அம்புறோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைத் திருப்பலி நாளை 13.10.2012 சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபின் நல்லடக்கம் நாரந்தனை சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் ஜெயராஜ் (மகன்)

42/1,கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(734)

# தமிழருக்கு உதவும் நிலைப்பாட்டில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், விநாயகமூர்த்தி மற்றும் செல்வராசா ஆகியோர் இரா.சம்பந்தன் தலைமையில் டில்லி சென்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஆலோசனை நடத்திய பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தது.

நேற்றுமுன்தினம் டெல்லி சென்ற அவர்கள் நேற்று மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து நீண்ட ஆலோசனை நடத்தினர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது, மீள்குடியேற்றம், இலங்கை அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமான முரண்பாடுகள், இந்தியாவின் பங்களிப்பு உட்பட பல்வேறு அம்சங்கள் அதில் விவாதிக்கப்பட்டன.

பிரதமரைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறிய சம்பந்தன் தமிழர்களின் கௌரவமான வாழ்விற்கு தொடர்ந்தும் இந்தியா துணை நிற்கும் என பிரதமர் உறுதியளித்ததாக தெரிவித்தார்.

இது தொடர்பாக சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரும் மனம்விரும்பி பேசினார். தமிழர்களின் பிரச்சினைகளை தமிழர்களின் உரிமையையும் நாட்டில் கௌரவமாகவும் சுய மரியாதையுடனும் பாதுகாப்பாக தங்களுடைய நியாயமான அபிலாசைகளை நிறைவேற்றி வாழ்வதற்கு உதவ வேண்டும் என்பதில் இந்தியா மிகவும் உறுதியாக இருக்கின்றது.

இந்த நிலைப்பாட்டிலிருந்து இந்தியா ஒருபோதும் பின் வாங்கப் போவதில்லை.

அந்த நிலைமை அடைவதற்கு இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றாக சேர்ந்து செயற்பட்டு அதை அடைவதற்கு தங்களால் முடிந்த அத்தனை முயற்சியையும் எடுப்பார்கள் என்றும் நாங்கள் ஒருமித்து வேலை செய்ய வேண்டும் என்றும் மிகவும் உறுதியாக கூறினார் என்றார் சம்பந்தன்.

இதேவேளை இலங்கைப் பிரச்சினையில் இந்தியா பொறுமை காத்து வருவதாகவும் அந்தப் பொறுமைக்கும் எல்லையுண்டு என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தங்களிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேற்றுக் காலை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை சந்தித்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்போதே கிருஷ்ணா இதனை கூறியுள்ளார்.

இந்தியாவின் நிலைப்பாடு மற்றும் இந்திய அரசின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் குறித்து கிருஷ்ணா விளக்கியதாகவும் தங்களது முயற்சிகள் தாங்கள் எதிர்பார்த்த விதத்தில் இன்றுவரை பலனளிக்கவில்லையென்று அவர் தெரிவித்ததாகவும் சம்பந்தன் கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தங்கள் தரப்பு முயற்சிகளையும் கருத்துக்களையும் கிருஷ்ணாவிடம் எடுத்துரைத்ததாகவும் எமது மக்கள் ஏமாற்றப்படுவதை ஏற்க முடியாது. நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கு எல்லோரும் ஒத்துழைத்து அந்தத் தீர்வை காணலாம் என்றால், அந்த பாதையில் செல்வதற்கு தயார் என்றும் சம்பந்தன் கூறினார்.

இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசு பிரேரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை பொறுத்தவரை, அதில் தமிழ்க் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என்று இந்திய அரசின் சார்பில் வழியுறுத்தப்படவில்லையென்று தெரிவித்த சம்பந்தன், அதே நேரத்தில் அதில் சேரமாட்டோம் என்று தாங்களும் கூறவில்லையென்றும் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய்த் தாக்கம்...

அதிகமாக பாவிப்பதையும் வைத்திய நிபுணர்கள் எமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே வைத்திய நிபுணர்களால் காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட சில ஆலோசனைகளை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

✹ தற்போதைய சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்படும் போது அது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய்வில் இருக்க வேண்டும். வேலைக்கு செல்பவர்களும், மாணவர்களும் விடுமுறைபெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும். வீட்டிலும் கடுமையான வேலை செய்யாது பூரண ஓய்வில் இருக்க வேண்டும்.

✹ பொதுவாக டெங்குக் காய்ச்சலின் பின் விளைவுகள், இறப்புக்கள் காய்ச்சல் தணிந்த பின்னரே ஏற்படுவது வழமை எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் இரண்டு நாட்களுக்கு ஓய்வு அவசியம்.

✹ மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில் விளையாட்டுக்களில் பங்கு பெற்றுவதை தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்குக் காய்ச்சலுடன் பரசிற்ற மோல் வில்லைகளை போட்டுக் கொண்டு விளையாட்டுக்களில் பங்கு பற்றிய இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிர் இழந்ததை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

✹ காய்ச்சலின் போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த்தன்மை பற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

✹ சில நோயாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாக பாவித்து சுயவைத்தியம் செய்வதனை அவதானிக்க முடிகிறது. இதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின் படி பரசிற்றமோல் வில்லைகளை பாவிக்க வேண்டும். குறிப்பாக இது குழந்தைகளுக்கு மிக மிக அவசியம்.

✹ மேலும் காய்ச்சலுடன் மயக்கம், வயிற்று வலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் காலம் தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையை பெறவேண்டும் என்றுள்ளது. (ஏ)

உயர் வருமானம் பெற்றுத்தரும் கற்கைநெறிகளை தெரிவு செய்யுங்கள்
Dip. in Marketing
மாதாந்தம் 60,000 இற்கு மேல்
▶▶ குறுகிய காலத்தில் குறைந்த செலவில் யாழ்ப்பாணத்தில் கற்கை நெறியைத் தொடரலாம்.
▶▶ இலங்கையில்அல்லது UK, USA, CANADA, AUSTRALIA etc. இல் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய முடியும்.
▶▶ பாடநெறி காலத்தில் தொழில் சார் பயிற்சியின்போது மாதாந்த வருமானம் பெற்றுக் கொள்ள முடியும்.
▶▶ ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக கதைப்பதற்கு இலவசமாக பயிற்சியளிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு: 0777444225
(சி-1281)
IISEEES NALLUR CAMPUS
762 , பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P.: 021 222 4728, info@iiseees.lk

# விரிவுரையாளர்களின்...

அறிவித்திருந்தனர்.

பொருளாதார அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப் பட்டதாகவும், இன்று முதல் பணிக்குத் திரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பல்கலைக்கழக பேராசிரியர் தொழிற் சங்கப் போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த 99 நாட்களாக நடைபெற்று வந்த தொழிற்சங்கப் போராட்டம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்சங்கப் போராட்டத்தை முடிபுக்கு கொண்டு வருவதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் தமக்கு அறிவித்துள்ளதாக பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் நேற்று இரு தரப்பினரும் கூட்டாக இணைந்து ஊடக சந்திப்பொன்றை நடத்த தீர்மானித்திருந்தனர்.

எனினும், இறுதி நேரத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என பல்கலைக் கழக பேராசிரியர் ஒன்றியம் அறிவித்தது.

அத்துடன் தொழிற்சங்கப் போரட்டத்தை கைவிடத் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களாக இலங்கை பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தை கைவிட தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் செயலாளர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜீத் தெரிவித்துள்ளார். இதன்படி இன்றைய தினம் முதல் தாம் கடமைக்குத் திரும்புவதாக குறிப்பிட்டுள்ளார். (ஏ-11)

# டிரக்ரில் நசியுண்...

விளையாடிக் கொண்டு இருந்துள்ளனர்.

இந் நிலையில் வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் திடீரென உருண்டு தகரத்திலான வீட்டுக்குள் புகுந்துள்ளது. இதன்போது அக் குழந்தை நசியுண்டு உயிரிழந்தது.

திடீரென உழவு இயந்திரம் உருண்டு செல்வதை அவதானித்த அவர்களது தந்தையார் அதனை நிறுத்தி மற்றைய குழந்தைகளை காப்பாற்றினார். சம்பவத்தில் ஸ்ரிபன் பிறின்சி (வயது 1) என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார். (ஏ-11,85)

அமெரிக்கா
லொத்தர் வீசா -2014
விண்ணப்பங்களை
இன்று முதல்
அனுப்பிக்கொள்ளலாம்
முடிவுத்திகதி :- 03.11.2012
Arrul Global Express
T.P :- 021 222 6113
No.1, Brown Road, Jaffna.

# இறுதிப் போரில் புலி...

கட்ட போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சரணடைய விரும்பியுதாக முன்னாள் நோர்வேயின் அமைச்சர்எரிக்சொல்ஹெய்ம்தெரிவித்துள்ளார்.

2009 மே மாதம் 17,18ஆம் திகதி வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணினோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அல்லது வேறு சர்வதேச நிறுவனமொன்றின் ஊடாக இறுதி நேரத்தில் சரணடைய புலிகள் விரும்பினர்.

எந்த மூன்றாம் தரப்பும் போர்க் களத்தில் இருக்க வில்லை என்பதனால் வெள்ளைக் கொடியுடன் சரணடையுமாறு ஆலோசனை வழங்கினோம் எனினும், ஆலோசனை வழங்கியதன் பின்னர் போரில் புலிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இறுதிக் கட்ட போரின் போது ஒரு சில புலி உறுப்பினர்களேனும் சரணடைய விரும்பியிருக்கலாம், அவர்கள் எவ்வாறு உயிரிழந்தவர்கள் என்பது விளங்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரம் குறித்த புரிதல் மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

இதுவே தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதிக்கட்ட அழிவிற்கு காரணமாகவும் அமைந்தது. இறுதி நேரத்தில் சர்வதேச சமூகமோ அல்லது புலம்பெயர் தமிழர்களோ தலையீடு செய்து தங்களை காப்பாற்றுவார்கள் என மரபு ரீதியில் போரை முன்னெடுத்து வந்த புலிகள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. (ஏ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி ஞானசுந்தரம் அமிர்தாம்பாள்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசுந்தரம் அமிர்தாம்பாள் அவர்கள் 08.10.2012 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு (உத்தரவு பெற்ற வியாபாரி, மண்டைதீவு) சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சந்திரகுமார் (ஜேர்மன்), காலஞ்சென்ற ஜெயக்குமார், வசந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமாரலிங்கத்தின் (வேலணை ப.நோ.கூ.சங்கம், மக்கள் கடை முகாமையாளர்) அன்புச் சகோதரியும், றுக்ஷி, கீர்த்தனா, சந்தோஷ், கிஷோன், ரிபானி ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், றியானின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.10.2012 வெள்ளிக்கிழமை இன்று காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(இ)

# வெளிநாட்டிலுள்ளவர்...

பதிவு செய்து கொள்ள முடியும்.

இதனை அவர்களது உறவினர்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தற்போது வாக்காளர் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுமார் 6 ஆயிரம் பேர் இரட்டைப்பதிவினை மேற்கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை இவர்களுக்கு எதிராக எந்தவித சட்டநடவடிக்கையும் மேற்கொள்ள போவதில்லை எனவும் எதிர் காலத்தில் இவ்வாறு இரட்டைப் பதிவினை யாராவது மேற்கொண்டால் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஏ-6)

# ஆஸி.செல்ல...

கடற்படையின் பேச்சாளர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்தார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமான முறையில் தப்பிச்செல்ல முயற்சித்த 13 பேர் வத்தளை, ஹெந்தல பகுதியில் வைத்து இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-11)

சவுதி அரேபியாவில் உடனடி வேலைவாய்ப்பு
வடபுலத்தில் வாழும் இளைஞர்களே! இதோ உங்களுக்காக அதிஉயர் சம்பளத்துடன் கீழ்வரும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.
ஸ்பிரே பெய்ன்டர் (Auto) — மெக்கானிக் (Diesel/Petrol)
டின்கர் (Tinker) — மேசன் (mason)
வெல்டர்(welder) — மெக்கானிக் எல்பர்ஸ் mechanical helpers
இலக்ரீசியன் (Electrician)
(C-1243)
கட்டார் நாட்டிலும் வெல்டர் தேவை
(ஒரு மாதத்தில் பயணம்)
விரையுங்கள் இரண்டே வாரத்தில் பயணம்
(தங்குமிடம் மருத்துவம் இலவசம்)
Lanka Voice 24, Station Road, vavuniya.
0750650084

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org